# உஸ்மானிய சாம்ராஜ்யம் வீழ்ச்சியும் பின்னணிகளும்

யூ. எல். ஏ. அமீர்
B.A (SEU), B.A.Hons (UQU), M.I.S (UKM)

அல்-ஹிக்மா வெளியீட்டகம்
தெஹிவல
2012

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உஸ்மானிய ராஜ்யம் வீழ்ச்சியும் பின்னணிகளும் |
| ஆசிரியர் | : | யூ.எல்.ஏ.அமீர் |
| வெளியீடு | : | அல் ஹிக்மா வெளியீட்டகம் தெஹிவளை |
| அளவு | : | A5 |
| பதிப்பு எண் | : | முதலாம் பதிப்பு |
| பக்கம் | : | 35 |
| ISBN | : | 978-955-54603-2-3 |
| திகதி | : | 2012 |

பகுதி 1

# அறிமுகம்

## கிலாபத்தின் அந்திம கால நிகழ்வுகள்:-

சுமார் ஆறு நூற்றாண்டுகள் முஸ்லிம் உலகை நிர்வகித்து இஸ்லாத்தினதும் முஸ்லிம்களதும் செல்வாக்கினை ஆசியா, ஆபிரிக்கா மட்டுமல்லாது ஐரோப்பா உள்ளடங்கலாக மூன்று கண்டங்களுக்கும் பரவச் செய்து, பலம் பொருந்திய விசாலமானதோர் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை உருவாக்கிய பெருமை உஸ்மானியர்களுக்குண்டு.

முஸ்லிம்கள் வரலாற்றில் ஆட்சி புரிந்த குடும்பங்களுள் மிகப் பெரும் குடும்பமாகிய உஸ்மானியப் பரம்பரையினர் இஸ்லாத்தைப் பரப்புதல் அதற்கெதிரான மேற்குலக சதிமுயற்சிகளை முறியடித்தல் அதன் பெருமையை உலகறியச் செய்தல் போன்றவற்றில் அரிய பல பங்களிப்புக்களை செய்துள்ளனர்.

பல நூற்றாண்டுகாலம் பலம் பொருந்திய ஆட்சியினை மேற்கொண்டிருந்த உஸ்மானியர்கள் மேற்கு நாடுகளின் குறிப்பாக பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகளின் ஆக்கிரமிப்பு மற்றும் சுரண்டல் செயற்பாடுகளிலிருந்து அறபுலகையும் ஏனைய முஸ்லிம் தேசங்களையும் பாதுகாத்தது மட்டுமல்லாது மத்திய தரைக் கடலின் தீவுகள் மேற்குலகின் பிடியிற் சிக்கிக் கொள்ளாதிருக்கவும் இவர்கள் அரணாக செயற்பட்டனர்.

வழக்கறிஞர் முஹம்மத் பரீத் பெக் (1868-1919) உஸ்மானியப் பேரரசு பற்றிக் குறிப்பிடும் போது ‘‘மாட்சிமை தங்கிய உஸ்மானியப் பேரரசு இஸ்லாத்தைப் பாதுகாப்பதில் மிகவும் சிரத்தை காட்டியதுடன் அதில் வெற்றியும் கண்டது. அத்துடன் ஐரோப்பாவின் முன்னால் பலமான அரணாகவும் வேலியாகவும் செயல்பட்டு அவர்களது இஸ்லாமிய உலகின் மீதான வேட்கையை அடைந்து கொள்ள முடியாதவாறு தடுத்துக் கொண்டிருந்தது. ஐரோப்பியர் தமது படை நடவடிக்கைகளை கைவிடும் நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவற்றின் பின்னர் உள்நாட்டு சீர்திருத்தம் அபிவிருத்திகளில் ஈடுபட்டனர். இதனால் நாடுகள் மத்தியில் இவர்களுக்கு முதலிடமும் கௌரவமும் கிடைத்தது, அவர்களது கருத்துக்கள் சரி காணப்பட்டன, அவர்களது சொற்கள் மதிக்கப்பட்டன, அவர்களது மூன்று கண்டங்களை

உள்ளடக்கிய பரந்து விரிந்த இறைமைகளுக்கு நிகராக உலகில் எந்த சக்தியும் காணப்படவில்லை எனக்குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பல நூற்றாண்டுகள் பலம் பெற்றுக் காணப்பட்ட உஸ்மானியப் பேரரசில் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பலவீனமும் தளர்வும் தோன்ற ஆரம்பித்தது. அதன் பின்னணியில் ஆக்கிரமிப்பு சிந்தனை கொண்ட மேற்கு நாடுகளின் நடவடிக்கைகள் காணப்பட்டன. இதனால் பல பின்னடைவுகளும் இழப்புக்களும் தொடர்ந்த வண்ணமிருந்தன. விசேடமாக ஐரோப்பா பல நவீன துறைகளில் வேகமாக வளர்ந்து கொண்டிருந்த வேளை புதிய சிந்தனைகள், கலாசாரங்களை அதனால் முன்வைக்க முடியவில்லை. இந்நிலையிலிருந்து விடுபட்டு ஐரோப்பாவுக்கு நிகராக வளர்ச்சி காணல், அதன் சவால்களை முறியடித்து தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துதல் போன்றவற்றுக்குப் பொருத்தமான வழிமுறைகள் பற்றி சிந்தித்தனர். இவையனைத்திற்கும் சிறந்த தீர்வு நாட்டின் உட்கட்டமைப்பைசீர் செய்வதிலேயே தங்கியுள்ளது எனக் கண்டனர்.

இக்காலகட்டத்தில் நாட்டின் நிர்வாகப் பொறுப்பு சுல்தான் மூன்றாம் சலீமின் (1762-1808) கரங்களுக்கு மாறியது. இவர் உள்நாட்டுச் சீர்திருத்தப்பணியில் மிடுக்குடன் செயற்பட்டார். இராணுவம் கடற்படை ஆகியவற்றை மறுசீரமைத்ததுடன் நவீன ஆயுதங்களையும் வழங்கினார். ஆயினும் துருக்கிய உஸ்மானியரால் உருவாக்கப்பட்டு அவர்களது ஆட்சிப்பலத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றிய “அல்-இங்கிஷாரியா”* எனும் இராணுவப் பிரிவு அவரது சீர்திருத்த நடவடிக்கை களுக்கு தடைக்கல்லாய் அமைந்து விட்டது.

மீண்டும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் இருந்து மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றைய ஆட்சியாளரான ஸுல்தான் இரண்டாம் மஹ்மூத் (1785-1839) இதில் மும்முரமாக ஈடுபட்டார். அவருக்குத் துணையாக முஸ்தபா றஷீத் பாஷா, அலீ பாஷா, புவாத் பாஷா போன்றவர்களும் முக்கிய பங்கு வகித்தனர்.

ஸுல்தான் மஹ்மூத் தனது மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் நிர்வாக, இராணுவத் துறைகளில் மிக முக்கிய கவனம் செலுத்தினார். சீர்திருத்தப் பணிக்கு தடைகல்லாகக் காணப்பட்ட இங்கிஷாரிய்யா படைப்பிரிவின் மிலேச்சத்தனமான நடவடிக்கை களைத் தடுத்து நிறுத்தியதுடன் அப்பிரிவினை அடக்கி, கட்டுப்பாட்டினுட் கொண்டு வந்தபின் நவீன மயப்படுத்தப்பட்ட தரமிக்க இராணுவமொன்றின்

உருவாக்கத்திற்கு அத்திவார மிட்டார். மறுசீரமைப்புத் திட்டங்கள் அடங்கிய சுற்று நிருபங்களை அனைத்துப் பிராந்தியங்களின் கவர்னர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் அனுப்பி வைத்தார். ஆயினும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தியடைய முன்னரே அவர் காலமாகி விட்டார். அவரது காலத்தில் இராணுவ மறுசீரமைப்புப் பணிகள் கணிசமானளவு மேற்கொள்ளப்பட்ட போதிலும் பூர்த்தி நிலையை அடைந்திருக்கவில்லை.

அவரையடுத்து பதவியிலமர்ந்த அவரது மகனாகிய ஸுல்தான் முதலாம் அப்துல் மஜீத் (1822-1861) உள்நாட்டு சீர்திருத்த முன்னெடுப்புக்களில் தனது தந்தையாரின் வழியைப் பின்பற்றினார்.

அவர் தனது பணியின் முதற் கட்டமாக நாட்டில் முதன் முதல் யாப்பாக சிறந்த கட்டமைப்புக்கள் என்ற பொருள்பட (கத்-கல்கானா) எனும் யாப்பினை 1839ல் நாட்டுக்கு அறிமுகம் செய்தார். அதில் புதிய மறுசீரமைப்புக்கான வழிமுறைகளை வரையறை செய்ததோடு அதன் அடிப்படைகளையும் தெளிவு படுத்தியிருந்தார். அவற்றுள் முதன்மையானதாக தனிமனித சுதந்திரம், கருத்துச்சுதந்திரம் முஸ்லிம் முஸ்லிமல்லாதோர் சமத்துவம் போன்றன காணப்பட்டன.

இருந்த போதிலும் வரையப்பட்ட திட்டங்களை சரிவர நடை முறைப்படுத்த முடியாதவாறு ரஷ்யாவுடனான யுத்தம் அவரைத் திசைமாற்றி விட்டது. எனவே யுத்தம் முடிவுற்றவுடன் 1856ல் ‘‘ஹமாயூன்’’ எனும் பெயரில் புதிய வரைபொன்றை வெளியிட்டார். இது ஏலவே இடப்பட்ட திட்டங்களை வலுப் படுத்துவதாகவும், கிறிஸ்தவர்களின் உரிமைகளை உறுதி செய்தல், புதிய நிர்வாக ஒழுங்குகள் போன்ற மேலும் சில புதிய விடயங்களை உள்ளடக்கியதாகவும் அமைந்திருந்தது.

அடுத்து ஸுல்தான் அப்துல் அஸீஸ் (1830 – 1876) பதவியேற்றபோது மேலும் சில புதிய சீர்திருத்தங்களை மேற் கொண்டார். அவற்றுள்:

1) காணிச் சட்டம், குற்றவியல் சட்டம், தாபூ சட்டம் போன்றன அடங்குகின்றன.

2) உஸ்மானியர்களின் பிரபல மார்க்க அறிஞர்கள் கொண்ட ஒரு சபையினை உருவாக்கி அவர்களூடாக ‘‘ஷரீஆ சீர்திருத்தங்கள்’’ என்ற சஞ்சிகையை 1867ல் வெளியிட்டார்.

இவரது காலத்தில் அஹ்மத் மத்ஹத் பாஷா* என்பவர் மேற்கத்திய நடைமுறைகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட யாப்பொன்றினை நாட்டுக்கு அறிமுகப்படுத்துமாறு ஸுல்தான் அப்துல் அஸீஸுக்கு அடிக்கடி நெருக்கடி கொடுத்த வண்ணமிருந்தார். அவர் தனது நிலைப்பாட்டில் பிடிவாதமாய்க் காணப்பட்டதால் வேறு வழியின்றி அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டு ஒதுக்கிவைக்கப்பட்டார். ஆயினும் ஒருவாறு மீண்டும் அவைக்குள் பிரவேசித்த மத்ஹத்பாஷா ஸுல்தானைப் பதவி நீக்கும் சதி முயற்சியொன்றினை மேற்கொண்டு அதில் வெற்றிகண்டான். அத்துடன் ஸுல்தானை அவரது இல்லத்தில் வைத்தே படுகொலை செய்து விடவும் சதித் திட்டம் தீட்டினான்.

பின்னர் ஸுல்தான் ஐந்தாம் முறாதை (1840 – 1904) பதவியிலமர்த்தும் முயற்சியில் ஈடுபட்டான், சிறிது காலத்தினுள் அவர் புத்திபேதலித்தவர் எனும் தீர்ப்பொன்றினை நாட்டின் சமயத் தலைவரூடாகப் பெற்று அவரையும் பதவி நீக்கம் செய்தான்.

## ஸுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத்

உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் 34ம் ஆட்சியாளராக ஸுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் ஹிஜ்ரி 1876ல் பதவியேற்றார். அக்காலப் பகுதியில் பேரரசு மிகவும் இக்கட்டான சூழ்நிலையை அடைந்திருந்தது. உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்கள் அனைத்தும் நலிவுற்று மோசமான நிலையை அடைந்திருந்தன.

வெளிவிவகாரங்களைப் பொறுத்தவரையில் மேற்கு நாடுகள் உஸ்மானிய சாம்ராஜ்யத்தைப் பலவீனப்படுத்தி தமக்குட் பங்கிட்டுக் கொள்வதில் மிகவும் ஆவலாயிருந்தன. ஒருபுறம் பொஸ்னியா, குரோஷியா ஆகியன உஸ்மானிய இராணுவத்தைத் தோற்கடித்து கரும் மலைத்தொடரையும் முற்றுகையிட்டிருந்தன.

மறுபுறத்தில் சேர்பியா ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவப் பலத்துடன் பேரரசுக்கெதிராய்ப் போர்ப் பிரகடனம் செய்தது. அதே காலப்பகுதியில் 1877ல் ரஷ்யாவும் பேரரசின் மீது போர் தொடுத்தது. இதனிடையில் நாட்டுக்கென யாப்பொன்றினை அறிமுகப்படுத்தி உள்நாட்டு சீர்திருத்தங்களை (மேற்குலகைத் திருப்திப்படுத்தும் வகையில்) மேற்கொள்ளுமாறு தொடர்ச்சியாக அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

அத்துடன் ரஷ்யா ஆஸ்திரியாவின் தூண்டுதல்களால் உந்தப்பட்ட பல்கேரியர்களின் கிளர்ச்சிகள் இவ்வாறு பேரரசைச் சூழவுள்ள அனைத்துப் பிராந்தியங்களும் நிம்மதியற்ற தளம்பல் மிக்க சூழ்நிலையிற் காணப்பட்டன.

உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்த வரையில் நாட்டின் திறைசேரி வங்குரோத்து நிலையிலிருந்தது. கடன் பழு 300 மில்லியன் லீராக்களையும் தாண்டியிருந்தது. தேசியவாதம் பல்வேறு மட்டங்களிலும் பலமாக ஒலித்துக் கொண்டிருந்தது. மேற்குலகின் தூண்டுதல்களால் குறிப்பாக பிரித்தானியாவின் பின்னணியில் அரசியல் இலக்குடைய பல இயக்கங்கள் தோற்றம் பெற்றிருந்தன. இவை இஸ்தான்பூல் பெய்றூத் ஆகிய நகரங்களையே முக்கிய தளங்களாகக் கொண்டியங்கின. இவற்றுள் பெய்றூத்தைத் தளமாகக் கொண்ட இயக்கங்களுக்கு கிறிஸ்தவர்களின் பங்களிப்புக்கள் மிகப்பலமாகக் காணப்பட்டன. இவ்வியக்கங்களைத் தோற்றுவிப்பதில் முக்கிய பங்காற்றியவர் களுள் ''புத்ரஸ் அல் புஸ்தானீ'', ''நாஸீப் அல் யாஸஜீ'' போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இஸ்தான்பூலில் தோற்றுவிக்கப்பட்ட இயக்கங்களைப் பொறுத்தவரை அவை பல்வேறு அடிப்படைகள், தரப்பினரை உள்ளடக்கியிருந்தது. அவற்றுள் ''தவ்னமா''* என்று அழைக்கப்பட்ட யூதர்களின் செல்வாக்கு பெருமளவிற் காணப்பட்டது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட இயக்கங்களுள் மிகப் பிரபலமிக்கதாக இளம் துருக்கிய ஒன்றியம் காணப்பட்டது. இவ்வியக்கங்கள் பாரியளவில் நிறுவப்பட்டு பெர்லின், ஸலானீக், இஸ்தான்பூல் ஆகிய முக்கிய நகரங்களில் கிளைகளை அமைத்து இயங்கி வந்தது.

அதன் தலைமையை ஐரோப்பிய மாயைகளாலும், பிரெஞ்சுப் புரட்சியாலும் கவரப்பட்ட அஹ்மத் றிழா பக்** என்பவர் ஏற்றிருந்தார். இவ்வியக்கங்கள் உலகளாவிய மாசோனிய இயக்கத்தினால் வழிநடாத்தப்பட்டன.

இவற்றுடன், இஸ்லாமியப் பின்னணியற்ற ஐரோப்பிய மோகம் கொண்ட ஒரு சாராரினால் மேற்கொள்ளப்பட்ட மோசமான நடவடிக்கைகள் மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளை உள்நாட்டில் தோற்றுவித்தன.

இவர்கள் உஸ்மானிய கலீபாக்களை நெறியற்ற ஆட்சியாளர்கள் என்று விமர்சித்ததுடன், ஐரோப்பிய அடிப்படையிலான அரசியல் யாப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டுமெனக் குரலெழுப்பினர். அத்துடன் இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையிற் பணியாற்ற மறுப்புத் தெரிவித்தனர்.

இவையனைத்தும் இஸ்லாமிய உலகை பலவீனப்படுத்த மேற்குலகால் நடைமுறைப் படுத்தப்பட்ட சதித் திட்டங்களாகும். இவற்றைத் தெளிவுபடுத்த ஸுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீதின் குறிப்பு போதிய சான்றாகும். அதில் அவர் “ஆங்கிலேயர் மாஸோனியர் ஊடாக துருக்கியர் அமைப்பைச் சார்ந்தோரின் மடைமையைப் பயன்படுத்துவது போல், ஜேர்மனியர்களும், மாஸோனியர் ஊடாக இன்னுமொரு சாராரைப் பயன்படுத்துகின்றனர். இவ்விரு சாராருக்கும் ஆங்கிலேயர் யூகோஸ்லாவியாவிலும், ஜேர்மனியர் மக்தோனியாவிலும் தளமமைத்துக் கொடுத்துள்ளனர். இவ்விரு குழுவினரும் உள்நாட்டில் சதிப்புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கின்றனர்” எனக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறான சதிகள் குழப்பங்களுக்கு மத்தியிலேயே ஸுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் பதவியேற்றார். இதனால் நாட்டை அழிவிலிருந்து மீட்டுக்கரை சேர்க்கும் பாரிய சுமை அவர் மீது சுமத்தப்பட்டது. விரோதிகளின் சதித்திட்டங்களைத் தெளிவாகப் புரிந்திருந்த ஸுல்தான் உறுதியோடும் மதிநுட்பத்தோடும் பணி யாற்றினார். அவர் தனது ஒழுங்கமைக்கப்பட்டதும், நேர்மை யானதுமான நிர்வாகத்தைப் பின்வரும் வழிமுறைகளுடாக நகர்த்திச் சென்றார்.

1) தனக்கு எதிரானவர்களைத் தம் பக்கம் ஈர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். அதனாற் பலர் அவருடன் இணைந்து பணியாற்ற முன்வந்தனர்.

2) உலகளாவிய முஸ்லிம்கள் அனைவரையும் ஓரணியில் ஒன்று திரளுமாறு தனது பிரபலமான “உலக முஸ்லிம்களே ஒன்றுபடுங்கள்” எனும் வாசகம் ஊடாக அழைப்பு விடுத்தார். அதற்காக தாஈக்களுக்கான ஒரு கல்லூரியை நிறுவி அதில் பயிற்சியளித்து அனைத்து இஸ்லாமிய பிரதேசங்களுக்கும் அனுப்பி வைத்தார். இதற்கு முழு முஸ்லிம் உலகிலும் ஆதரவும்

வரவேற்பும் கிடைக்கப் பெற்றது. ஆயினும் இவற்றை ஒருபோதும் சகித்துக் கொள்ளாத மேற்குலகச் சக்திகள் மிகப் பலமாக இதனை எதிர்கொண்டன. அவற்றில் முக்கிய பங்காற்றியவர்களாக ஏகாதிபத்திய பிரித்தானியா வின் மூளையாகச் செயற்பட்ட ‘‘க்றோமா’’ பிரான்ஸைச் சேர்ந்த கீழைத்தேயவாதியான ‘‘ஹானுக்கோ’’ போன்றோர் இது மேற்குக்கெதிரான சதித்திட்டம் என பிரச்சாரம் செய்து இதனை நசுக்குவதில் ஈடுபட்டனர்.

3) முஸ்லிம் அறிஞர்கள், அரசியல் சாணக்கியமிக்கவர்களைத் தன்னுடன் நெருக்கமாக்கி அவர்களது ஆலோசனைகள் வழிகாட்டல்களைப் பெற்றார்.

4) ஷரீஆவின் அடிப்படையில் நீதிமன்றங்களை நெறிப்படுத்தி, நீதித்துறைப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தார்.

5) அரசின் பல பகுதிகளிலும் பரந்து காணப்பட்ட செல்வாக்கு மிக்கவர்கள் பொதுச் சொத்துக்களைப் பங்கிட்டுக் கொள்ளல் ஏகபோக உரித்துடைமைகளை ஒழித்ததுடன் இலஞ்சம், ஊழல், நிர்வாக சீர்கேடுகள் ஆகியவற்றை இல்லா தொழித்தார்.

6) வகுப்புவாதத்தை இல்லாதொழிக்க துருக்கிய இனமல்லாத ஏனையவர்கள், மற்றும் சிறுபான்மையினர் விடயத்தில் விசேட கவனம் செலுத்தினார். அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சில எல்லை மீறல் நடவடிக்கை களைக்கூட கண்டும் காணாதது போல் விட்டுக் கொடுத்தார். உதாரணமாக யூதர்களுடன் இணைந்து ஆர்மீனிய இனத்தவர்கள் ஸுல்தான் ஜும்ஆவுக்குச் செல்லும் போது அவரைப் படுகொலை செய்யத் திட்டம் தீட்டினர். அதனை அறிந்தும் ஸுல்தான் பெருந் தன்மையுடன் நடந்து கொண்டார். இதனூடாக சிறுபான்மைகளைக் காரணம் காட்டி மேற்குலகினர் நாட்டின் உள்விவகாரங்களிற் தலையிடும் வாய்ப்பினை இல்லாமற் செய்தார்.

7) அக்கால உலகின் பெரும் சக்திகள் மத்தியில் காணப்பட்ட கிலாபத்திற்கெதிரான ஒருமைப்பாட்டை இல்லாமற் செய்து அவர்களைத் திசைதிருப்ப முயன்றார். ஏனெனில் அவர்களுக்குள் ஒற்றுமையின்மை ஏற்பட்டால் இஸ்லாமிய உலகு நிம்மதியடைய முடியும் எனக் கருதினார். அத்துடன் சாம்ராஜ்யத்தின் படையணியை வளைகுடாவிலேயே நிறுத்தி வைத்தார். பயிற்சிக்குக் கூட வெளியேற்றவில்லை.

8) இராணுவத்தைப் பயிற்றுவிப்பதில் கூடிய கவனம் செலுத்தியதுடன் கிலாபத்தின் மையப்பகுதிகளையும் பலப்படுத்தினார்.

9) டமஸ்கஸ்ஸுக்கும், மதீனாவுக்குமிடையிலான ரயில் பாதைத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதில் மிகவும் ஆர்வம் காட்டினார். அதனூடாக முஸ்லிம்கள் மத்தியிலுள்ள பிணைப்பை மேலும் உறுதி செய்யலாம் எனக் கருதினார். ஏனெனில் அவ்விரு பிரதேசங்கள் மத்தியிலும் விரிசல்களைத் தோற்றுவிக்கப் பிரித்தானியர் மேற்கொள்ளும் சதிகளைத் தகர்க்கலாம் எனும் தனது ஆதங்கத்தை ஸுல்தான் அவரது குறிப்பில் ஓரிடத்தில் சுட்டிக் காட்டுகின்றார்.

## ஸுல்தான் அப்துல் ஹமீதும் யூதர்களும்

யூதர்கள் அவர்களது முதலாவது ஸியோனிச மாநாட்டினை 1315H/1897A.C யில் ஹேர்த்ஸல் எனும் ஸியோனிஸ இயக்கத் தலைவரின் தலைமையில் சுவீடனில் ''பால்'' எனும் நகரில் நடாத்தினர். அதில் யூத இனத்திற்கென ஒரு நாடு உருவாக்கப் பட வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்தனர். அதில் ஹேர்த்ஸல் பலஸ்தீனே யூதர்களுக்கான தாய் நாடாக அமைய வேண்டும் என்பதில் மிக உறுதியாகக் காணப்பட்டார்.

அன்று தொடக்கம் ஸியோனிய சிந்தனையும், அதனுடன் இணைந்ததான யூத தேசச் சிந்தனையும் மிக வேகமாக வளரலாயிற்று. ஹேர்த்ஸல் பல முறை ஸுல்தான் அப்துல் ஹமீதுடன் தொடர்பு கொண்டு பலஸ்தீனில் யூதர்கள் குடியேற அனுமதிக்குமாறு வேண்டிக்கொண்டிருந்தார். ஆயினும் ஸுல்தான் அதனை முற்றாக நிராகரித்துவிட்டார்.

எவ்வாறாயினும் தனது இலக்கை எட்டி விடவேண்டும் என்பதில் உறுதியாயிருந்த ஹேர்த்ஸல் ஸுல்தானுக்கு நெருக்கமான வர்கள் பலரூடாகவும், அதேபோல் உஸ்மானியப் பேரரசில் செல்வாக்குப் பெற்றிருந்தவர்கள் சிலரூடாகவும் ஸுல்தானை சம்மதிக்கச் செய்ய முயற்சிகளை மேற்கொண்டார். அவற்றிலும் அவர் தோல்வியையே சந்தித்தார்.

இறுதியில் யூதப் பெரியவரான ''மூஸா லீபி'' மற்றும் இமானுவேல் குர்ராஸோ ஆகியோரை அழைத்துக் கொண்டு ஸுல்தானை நேரில்

சந்தித்தார். அதன் போது பலவாறு ஸுல்தானை புகழ்ந்து முகஸ்துதி செய்து அவர்கள் வந்த விடயத்தைக் கூறினர். அத்துடன் பேரரசுக்குப் பெரும் தொகைக் கடன் வழங்குவதாகவும் ஸுல்தானுக்கு அன்பளிப்பாக ஐந்து மில்லியன் தங்க லீராக்களை வழங்குவதாகவும் ஆசைகாட்டியதுடன் ஸுல்தானுக்கெதிராய் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஐரோப்பிய அமெரிக்க ஊடகங்களின் பிரசாரங்களை நிறுத்துவதற்கான அரசியல் உடன்படிக்கை ஒன்றினை ஏற்படுத்தவும் இணக்கம் தெரிவித்தனர்.

ஆனால் ஸுல்தான் இவையனைத்தையும் மிகத் தெளிவாக மறுத்துரைத்ததுடன் அவர்களைத் தனது சபையிலிருந்து வெளியேற்றி விட்டார். மேலும் பலஸ்தீனில் யூதர்கள் குடியேறுவதை முற்றாகத்தடை செய்து உத்தரவும் பிறப்பித்தார்.

இதிலிருந்து யூத சக்திகளும் ஏனைய எதிரிகளும் தமக்கு முன்னாலிருப்பது ஒரு பலமான, தளராத எதிரி, எவ்வித பசப்பு வார்த்தைகளோ, பண கவர்ச்சிகளோ அவரிடம் வெற்றியளிக்காது. அவர் ஆட்சியிலிருக்கும் வரை உலக ஸியோனியத்திற்கு பலஸ்தீனில் நுழைய முடியாது என்பதனைப் புரிந்து கொண்டனர்.

அதே போன்று ஐரோப்பியரும் உஸ்மானியப் பேரரசைப் பங்குபோட்டுக்கொள்வதுடன் யூதர், ஆர்மீனியர், கிரேக்கர்களுக்கு நாடுகள் உருவாக்கவும் முடியாது என்பதை உணர்ந்து கொண்டனர்.
தமது முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போகவே இறுதியில் எவ்வாறாயினும் ஸுல்தானை பதவியிலிருந்து வெளிற்றேிவிட வேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர். அவர்களது இவ்விலக்கை அடைந்து கொள்வதற்காக உஸ்மானியப் பேரரசின் எல்லைக்குள் நெறி தவறிய பல இயக்கங்களையும் குழுக்களையும் சிந்தனைகளையும் உருவாக்கி வழிநடாத்தினர். அவற்றுள் குறிப்பிடத்தக்கதாக மாஸுனிய்யா தோனமா ஒருமைப்பாட்டுக்கும் முன்னேற்றத்துக்குமான இயக்கம், அறபுத் தேசியவாதம், துருக்கியத் தேசியவாதம் என்பன முன்னணி சக்திகளாகும். இவையனைத்திற்கும் பக்கபலமாகவும் வந்து சக்தியாகவும் நயவஞ்சக யூதர்களான தொனமா யூதர்கள் செயற்பட்டனர். ஆயினும் அனைத்தினது கட்டுப்பாட்டினையும், வழிநடாத்தும் பணியையும் பிரித்தானிய உளவுத் துறையின் தலைமையகமே மேறகொண்டது.

## ஸுல்தான் அப்துல் ஹமீதும் யாப்பும்

சுதந்திரவாதிகளின் தந்தை என அழைக்கப்பட்ட மத்ஹத் பாஷா நாட்டினுள் மேற்குலகின் சிந்தனைக்குட்பட்ட யாப்பொன்றினை அறிமுகப்படுத்தி அதன் அடிப்படையிலான ஆட்சி முறையை ஏற்படுத்த வேண்டுமென்பதில் இடைவிடாது முயன்று கொண்டிருந்தார். அந்த வகையில் மத்ஹத் பாஷாவும் அவரது சுதந்திரக் கட்சியினரும் சேர்ந்து ஸுல்தான் முறாதின் மிகக் குறுகிய கால ஆட்சிக்குள் ஒரு யாப்பினையும் வரைபு செய்ததுடன் அதனையொட்டிய (தெரிவு செய்யப்பட்ட) கால ஒழுங்கினையும் திட்டமிட்டு முடித்திருந்தனர். அத்துடன் ஸுல்தாான் அப்துல் ஹமீதிடம் அவர் பதவியேற்பதற்கு முன்னரே மேற்படி யாப்பினைப் பிரகடனம் செய்வதற்கும், அடிப்படைச் சட்டங்களை ஏற்படுத்துவதற்குமான உறுதி மொழியினைப் பெற்றிருந்தனர்.

ஸுல்தான் அப்துல் ஹமீத் ஆட்சிப் பொறுப்பேற்ற போது, அதியுயர் பதவியான "ஸத்றுல் அ.்.ழம்" எனும் பதவியிலிருந்து வயது முதிர்ச்சியால் தொடர்ந்து பணியாற்ற முடியாது விலகிக் கொண்ட றஷீத் பாஷாவின் இடத்திற்கு மத்ஹத் பாஷாவை நியமிக்கத் தனது விருப்பத்தை அறிவித்தார். ஆயினும் நியமனத்தின் நான்காம் நாளிலேயே 119 தலைப்புக்கள் (ஷரத்துக்கள்) அடங்கிய அடிப்படை சட்டக் கோவையை ஸுல்தானிடம் ஒப்படைத்து உடனடியாக அதனை பிரகடனம் செய்து அந்நாளிலிருந்தே அதனை அமுலுக்குக் கொண்டு வரும் படியும் ஸுல்தானைப் பணித்தார். அத்துடன் அரசின் அடிப்படைச் சட்டமூலம் 1876ல் "ஆஸ்தானா" விலும் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வுகளால் மத்ஹத் பாஷாவின் சுயரூபம் வெளிப்பட்டது. அவர் இளம் துருக்கிய ஒன்றியத்தின் ஆதரவாளராகவும் பிரித்தானியாவுடன் இரகசிய தொடர்பு கொண்டவராகவும் காணப்பட்டர். ஆத்துடன் ஸுல்தானை பதவி நீக்கம் செய்துவிட்டு அவரது சகோதரர் முறாதைப் பதவியிலமர்த்தவும் திட்டம் தீட்டியதோடு, அரசியலில் இருந்து மார்க்கத்தை ஒதுக்கவும் பகிரங்கப் பிரச்சாரம் செய்தார். இதனால், அவரை உடனடியாகப் பதவி நீக்கம் செய்த ஸுல்தான் அப்துல் ஹமீத் அப்பதவிக்கு அத்ஹம் பாஷாவை நியமித்தார்.

யாப்புத் தொடர்பிலான துருக்கிய பிரதிநிதிகள் சபை தொடர்ந்து தமது அவைக் கூட்டங்களை நடாத்தி வந்தது. ஆயினும் அரசின் ஏனைய

பிராந்தியங்களது முக்கியஸ்தர்களுடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்த ஸுல்தான் நிலைமை பொருத்தமில்லை என்ற காரணத்தால் யாப்புச் சபையை கால வரையறையன்றி இடைநிறுத்தி வைத்தார். இந்நிகழ்வு 1878ல் இடம்பெற்றது. மேலும் இந்த யாப்பினை உருவாக்கியவர்கள் இஸ்லாமிய ஷரீஆவின் விரோதிகள், அத்துடன் மேற்குலகின் நோக்கம் நீதியோ சமத்துவமோ அன்றி பேரரசை பலவீனப்படுத்தி இல்லாதொழிப்பதே என்பதையும், மிகத்தீர்க்கமாக உறுதி செய்து கொண்ட ஸுல்தான் அந்த யாப்பினை முழுமையாக செல்லுபடியற்றதாக்கினர்.

இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட நிலையில் சுமார் முப்பது வருடங்கள் கழிந்தன. இக்காலப் பகுதியில் ஸுல்தானுக்கெதிராக வெளியுலகில் இயங்கி வந்த இரகசிய இயக்கங்கள் உற்சாகமாக இயங்கின. இவை மிக இரகசியமாக தூதுவராலயங்கள், வெளிநாட்டுப் பத்திரிகைகள் எனப் பல வழிகளினூடாக உள்நாட்டிலும் துருக்கியை அண்மிய வெளிநாடு களிலுமிருந்து சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென குரலெழுப்பின.

இளம் துருக்கியர் ஒன்றியத்தின் மறு பிரிவியாகிய “ஐக்கியத்திற்கும் முன்னேற்றத்துக்குமான ஒன்றியம்” பொது ஜனங்களின் உணர்வுகளைத் தூண்டுவதில் ஓரளவு வெற்றிகண்டதோடு அரசின் மூன்றாம் படையணியை தம் பக்கம் திருப்பிக் கொள்வதிலும் வெற்றிகண்டது. இதன் பின்னணியில் இவ்வணியினர் 1908/7/23ம் திகதியில் ஸுல்தானிடம் 24 மணி நேரத்தினுள் வரையப்பட்டுள்ள யாப்பினைப் பிரகடனம் செய்ய வேண்டும் இல்லையெனில் 2ம், 3ம் படையணிகள் தலைநகரை முற்றுகையிடும் எனவும் அச்சுறுத்தல் விடுத்தனர். இதனால் யாப்பினை அமுல் செய்ய ஸுல்தான் நிர்ப்பந்திக்கப்பட்டார். அதனடிப்படையில் தேர்தல் இடம்பெற்று பாராளுமன்றம் மீண்டும் திறக்கப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து அடுத்தடுத்து பல நிகழ்வுகள் இடம்பெற்று இறுதியில் 1909/04/13ல் தலை நகரின் புரட்சியொன்று வெடித்தது. அதில் உள்நாட்டு நிலைவரம் மிகவும் இக்கட்டான நிலையினை எட்டியது. அதில் ஐக்கியத்துக்கும் முன்னேற்றத்துக்குமான ஒன்றியத்தின் படையினை சேர்ந்த சிலர் கொல்லப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக ‘‘ஸலானீக்’’ (ஆஸ்திரிய) எல்லைப் பகுதிக் காவற்படையணி தலை நகர் நோக்கி நகர்ந்தது. அதனுடன் பெரும் எண்ணிக்கையில் யூதர்களும், பல்கேரியர்களும் தொண்டர் படையணியாக இணைந்து கொண்டது மட்டுமல்லாது அவர்கள் ஒரு தனியான படையணியாகவே தம்மை ஒழுங்கமைத்தும் கொண்டனர். இவ்வாறு தலைநகரில் நுழைந்து ஸுல்தானின் வீட்டை முற்றுகையிட்டனர். அத்துடன் அவைரப் பதவி நீக்கம் செய்யுமாறு ஏகோபித்துக் குரலெழுப்பினார். இதன் தொடர்ச்சியாக ஐக்கிய ஒன்றியத்தின் நாற்தரப்புக் குழு ஒன்றை தாபித்து அதனூடாக ஸுல்தானை பதவி நீக்கும் முடிவை அறிவித்தனர். இக்குழுவில் யூதர்கள், ஆர்மீனியம், கிரேக்கர் உள்ளடங்கினர். இவர்களுக்கு மாஸோனிய இயக்கத்தைச் சேர்ந்த இமானுவேல் குர்ராஸோ எனும் இத்தாலியன் தலைமை வகித்தான். இவர்கள் ஸுல்தானிடம் சென்று பதவி நீக்கும் தீர்மானத்தை அறிவித்தனர். பதவிநீக்கும் தீர்மானத்துக்கான ஒப்புதலை உஸ்மானிய பேரரசின் மரபுப்படி நாட்டின் தலைமை ஷரீஆ நீதிபதியிடம் துப்பாக்கி முனையிற் பெற்றிருந்தனர்.

பல்வேறு பிரச்சினைகளுக்கும் குழப்பங்களுக்கும் மத்தியில் பேரரசினை சுமார் 33 வருடங்கள் நிர்வகித்துப் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கண்டதோடு, அதன் வீழ்ச்சியையும் தாமதிக்கச் செய்து இஸ்லாத்திற்காகவும் முஸ்லிம்களுக்காகவும் அரிய பல சேவைகளாற்றிய ஸுல்தான் அப்துல் ஹமீதின் பதவி கவிழ்ப்பு இவ்வாறு நயவஞ்சகமாக மேற்கொள்ளப்பட்டு அரங்கேற்றப்பட்டது.

**பிற்குறிப்பு :**

* இவ்விராணுவப்பிரிவு 17,18ஆம் நூற்றாண்டுகளில் மிகப் பலமும் செல்வாக்கும் கொண்டதாகக் காணப்பட்டது. இப்பிரிவு நேரடியாக அரசியலில் செல்வாக்குச் செலுத்தியதோடு ஆட்சியாளர்களை பதவியிலமர்த்தல், பதவி நீக்கல், கொன்றொழித்தல் போன்றவற்றில் கட்டுப்பாடின்றி நடந்து கொண்டது.

* 1822ல் பிறந்த இவர் இளம் துருக்கியர் இயக்கத்தின் (ஜம்இய்யது பதா அத்துர்க்கிய்யாவின்) முன்னனி செயற்பாட்டாளரும் உஸ்மானிய பேரரசில் பல முக்கிய பதவிகளை வகித்தவருமாகும். ஸுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் அவரை அதியுயர் பதவியான பிரதமர் பதவிக்கு நியமனம் செய்தார். பின்னர் உடனடியாகப் பதவிநீக்கம் செய்து தாயிபுக்கு நாடு கடத்தினர். அங்கேயே மர்மமான முறையில் மரணத்தை தழுவினான்.

* ஸ்பெயினில் முஸ்லிம் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் கத்தோலிக்கர்களின் அடக்குமுறையிலிருந்து தப்பிக்கு முகமாக உஸ்மானியப் பேரரசிற் குடியேறிய யூதர்களின் ஒரு குழுவைக் குறிக்கும். இவர்கள் ஸபாத்தாய் ஸபீ எனும் பெயரில் தன்னை ஈஸாவாகவும், பலஸ்தீனில் யூதர்களுக்கு நாடு பெற்றுக் கொடுப்பவராகவும் தன்னைப் பிரகடனம் செய்தவரை வழிப்படுவோராகும். இவர்களிற் பெரும்பகுதியினர் நயவஞ்சர்களாக இஸ்லாத்தில் நுழைந்து முஸ்லிம் பெயர்களை சூட்டிக் கொண்டதுடன் தமது இலக்கை அடைவதற்காக ஊடகங்கள் மற்றும் அரச உயர் பதவிகளை கைப்பற்றுதல் ஊடாக தமது இலக்கினை நோக்கிப் பயணித்தனர்.

* இவர் 1859ல் இஸ்தான்பூலில் பிறந்து பாரிஸ் சென்றதும் அங்கு ஓஜஸ்ட் கோன்ற், பேயோர் லாப்த் போன்றோரின் தத்துவங்களாற் கவரப்பட்டவர். ஊடகங்கள் வாயிலாக மேற்கத்திய அடிப்படையிலான அரசியலுக்காக குரல் கொடுத்தவரும், 1908ல் ஏற்படுத்தப்பட்ட முதல் பதில் சபையின் தலைவராக செயல்பட்டவருமாகும்.

## இரண்டாம் கட்டம்: ஐக்கிய கூட்டமைப்பின் ஆட்சி

முன்னர் குறிப்பிடப்பட்டது போல் கூட்டமைப்பு என்பது இளம் துருக்கியர் ஒன்றியத்திலிருந்து பரிணாமம் பெற்ற ''ஐக்கியம் முன்னேற்றத்திற்கான ஒன்றியம்'' என்பதனைக் குறிக்கும். இவர்களே இரண்டாம் முறை யாப்புப் பிரகடனத்தின் பின்னர் 1908ஆம் ஆண்டிலிருந்து உஸ்மானியப் பேரரசின் ஆட்சியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

இவ்வியக்கத்தின் தோற்றம் 1868ல் ஸுல்தான் அப்துல் அஸீஸ் காலத்தில் சுதந்திர புருஷர்கள் எனும் பெயரில் மிகச் சொற்ப அங்கத்தவர்களுடன் ஐரோப்பியர் சிந்தனை, மேற்கத்தியக் கலாசாரங்களின் கவர்ச்சி போன்றவற்றால் உந்தப்பட்ட சிலரால் தோற்று விக்கப்பட்டதாகும் என சில ஆய்வாரள்கள் குறிப்பிடுகின்றனர். இக்குழுவினர் தமது கருத்துக்களைப் பரப்புவதற்காக இலண்டனைத் தளமாகக் கொண்ட ''சுதந்திரம்'' எனும் சஞ்சிகையை வெளியிட்டனர். காலவோட்டத்தில் சில முக்கிய நபர்களும் இவ்வியக்கத்தில் இணைந்து கொண்டனர். இவர்களுள் நாமிக் கமால், ழியா∴ பாஷா, முஸ்தபா பாழில் போன்றோர் பிரபலமிக்கவர்களாகும்.

1889ல் வல்லரசின் இராணுவ மருத்துவக் கல்லூரி மாணவர்களில் ஒரு குழுவினர் ஒன்று கூடி ஸுல்தான் அப்துல் ஹமீதை பதவி நீக்கும் நோக்குடன் புரட்சி இயக்கம் ஒன்றினை ஸ்தாபித்தனர். இளம் துருக்கியர் அழைப்பின் அடிப்படை இலக்கினை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டும் இவ்வியக்கத்தின் உருவாக்கத்தின் பின்னணயியில் இக்கல்லூரியில் சில வருடங்கள் கற்ற ''இப்றாஹீம் தைமூ'' எனும் அல்பேனியன் காணப்பட்டான். இவன் தனது மாணவக் காலத்தில் தனது சிந்தனைக்கு ஒத்ததான கருத்துக்களைக் கொண்ட சில மாணவர்களை இனங்கண்டு அவர்களைத் தனது திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொண்டான்.

1889ல் தைமூ தனது கொள்கைக்கு இசைவானவர்களில் மூன்று மாணவர்களை ஒன்று சேர்த்து அவர்களுடன் கலந்தாலோசனை ஒன்றினை மேற்கொண்டான். இஸ்ஹாக் ஸக்கூத்தி, முஹம்மத் றஷீத் ஷர்கஸ், அப்துல்லாஹ் ஜவ்தத் ஆகியோரே அம்மூவராவர்.

இவர்களிடம் இரகசியமான தேசிய இயக்கம் ஒன்றினை நிறுவுமாறு தைமூ ஆலோசனை கூறினான். இவ்வியக்கத்தின் ஆரம்ப வித்துக்களான இந்நால்வருடன் மிக விரைவிலேயே மேலும் பல மாணவர்கள் இணைந்து கொண்டனர். மிகக் குறுகிய காலத்தில் இன்னும் பலர் இவர்களுடன் இணைந்து கொண்டனர்.

இத்தாலியில் 19ம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் தோன்றிய இயக்கத்தின் சாயல் கொண்ட இவ்வியக்கம் மிகவேகமாக உஸ்மானியத் தலைநகரின் உயர் கல்வி நிலையங் களில் பரவத் தொடங்கியது. பின்னர் இதன் முக்கிய உறுப்பினர்கள் ஐரோப்பா நோக்கி குறிப்பாக பாரிஸ் நோக்கி இரகசியமாக வெளியேறி ஒன்றிணைந்து இயங்கிய இவர்கள் அங்கிருந்து ''மஷூரத்'' எனும் பத்திரிகையை வெளியிட்டனர்.

இவ்வாறு பல வருடங்கள் பல படிகளைத் தாண்டி வளர்ந்த இவ்வியக்கம் இறுதியில் தனது இரகசிய திட்டங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள பகிரங்க செயற்பாடுகளில் இறங்கியது.

இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான சர்வதேச சக்திகள் இவ்வியக்கத்தின் பின்புலத்திலிருந்து முடியுமான அனைத்தையும் வழங்கி வந்தன என ஸுல்தான் அப்துல் ஹமீத் தனது குறிப்பில் பதிந்து வைத்துள்ளார். அதில் அவர், ''என்றோ ஒரு நாள் நிச்சயம் வரலாறு இந்த இளந் துருக்கியர்களின் மாஸோனியப் பின்னணி பற்றி அறிந்து கொள்ளும். எனது கணிப்பின்படி கிட்டத்தட்ட அவர்கள் அனைவருமே மாஸோனியர்களாகும். இவர்கள் ஆங்கிலேய மாஸோனிய சக்திகளைச் சார்ந்தவர்கள். இவர்களால் அளிக்கப்பட்ட உதவிகள் அனைத்தும் அரசியற் பின்னணி கொண்டவை என்பதை நிச்சயம் வரலாறு தெரிந்து கொள்ளும்'' எனக் குறிப்பிடுகின்றார்.

ஸுல்தான் அப்துல் ஹமீத் காலத்தில் மாஸுனிய்யாவிற்கென ஒரேயொரு (محفـــــــل) மையமே இயங்கி வந்தது. ஆனால் ஐக்கிய கூட்டமைப்பினரின் காலத்தில் பல எண்ணிக்கையிலான மையங்கள் நாட்டின் நாலாபுறங்களிலும் தோற்றம் பெற்றன. ஜக்ஸுஹாமி எனும் யூதன் பிரான்ஸிய ஆங்கிலேய அடிப்படைகளை உள்ளடக்கிய மாஸோனிய சிந்தனைகளை துருக்கிய மொழியில் எழுதியதுடன் தொடரடந்தும் மாஸோனியா தொடர்பில் பல ஆக்கங்களை வெளியிட்டான்.

ஸுல்தானுடைய காலத்தில் கைதுகள் பொலிஸ் பரிசோதனைகளிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளுமுகமாக ஐக்கிய மற்றும் முன்னேற்றத்திற்கான கழக உறுப்பினர்கள் இத்தாலிய மாஸோனியர்களின் வீடுகளிலேயே தமது கூட்டங்களை நடாத்தி வந்தனர். ஏனெனில், உஸ்மானியப் பேரரசுக்கும் இத்தாலிக்குமிடையிலான உறவுகளில் இத்தாலியர் பல சிறப்புப் பாதுகாப்புக்களைப் பெற்றிருந்தனர். அதனைப் பயன்படுத்தியே அவர்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அத்துடன் அவர்களுக்குத் தேவையான அனைத்துப் பெருளாதார உதவிகளையும் வெளியிலிருந்து பெற்றதோடு அரசியல் தஞ்சம் பெற்று வெளிநாடுகளில் வசித்து வருவோருடன் இடையறாத் தொடர்புகளையும் பேணிவந்தனர்.

இளம் துருக்கியர் வட்டத்தினை வடிவமைத்தல் வழிநடாத்துதல் போன்றவற்றில் யூத மூளைகளே முழுமையான பங்களிப்பினை வழங்கி வந்தன. அதற்கான நிதி உதவிகள் வெளிநாடுகளைச் சேர்ந்த யூத செல்வந்தர்கள் மற்றும் ஜேர்மன், வியன்னா, பாரிஸ், லன்டனைச் சேர்ந்த முதலாளித்துவ சிந்தனையாளர்கள் மூலமாக மிகத் தாராளமாக வழங்கப்பட்டு பலப்படுத்தப்பட்டனர்.

## அரசியல், நிர்வாகத் துறைகளில் கூட்டமைப்பினரின் நடைமுறைகள

1908ல் யாப்பு மீள் பிரகடனம் செய்யப்பட்டது. அதிகாரத்தைக் கைப்பற்றிய கூட்டமைப்பினர் பாராளுமன்றத்திற் பெரும்பான்மையைப் பெற்றிருந்தும் பொறுப்புக்கூறும் நிலையிலிருந்து விடுபட்டுக்கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தை நேரடியாகப் பொறுப்பேற்கவோ அல்லது மந்திரிப் பதவிகளை ஏற்கவோ முன்வரவில்லை. மாறாக ஒரேயொரு மந்திரிப் பதவியுடன் நிறுத்திக் கொண்ட அவர்கள் பின்னாலிருந்து அனைத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். குறிப்பாக ஸுல்தானையும் பிரதான அதிகாரிகளையும் கடுமையான கண்காணிப்பில் வைத்திருப்பதில் முக்கிய கவனம் செலுத்தினர்.

ஸிலானிக் இல் காணப்பட்ட அவர்களது உயர்மட்டக் குழுவே திரைமறைவிலிருந்து நிலைமையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. இவ்வுயர்மட்டக் குழுவின் பிரபல முக்கியஸ்தர்கள் நாளாந்தம் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கூடி கூட்டமைப்பின்

திட்டங்கள் எதிர்பார்ப்புக்களை அறிவித்து அதன்படியே இயக்கிக் கொண்டிருந்தனர். இதே வடிவிலான இயக்கமே, மாநிலங்களிலும், ஏனைய உஸ்மானியப் பேரரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் நடைபெற்று வந்தது. இதன் போது கூட்டமைப்பின் கட்டுப்பாடுகளுக்கு உடன்பாடு கொள்ளாத அரசவை உறுப்பினர்கள் தொடர்பில் மேலிடத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்டனர். 1908ல் யாப்புப் பிரகடனத்தின் பின்னர் கட்டமைப்பினால் கூட்டப்பட்ட பொது மாநாட்டில் எட்டுப்பேரடங்கிய மத்திய குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது. அதில் அஹ்மத் றிழாபக், அன்வர் பக், கல்அத் பக், மத்ஹத் ஷுக்ரி பக் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இக்குழுவே நாட்டை நிர்வகிக்கும் திட்டங்களை வகுப்பதுடன் அவற்றைப் பிரதம அதிகாரி, மந்திரிசபை ஆகியவற்றினூடாக நிறைவேற்றல் அல்லது அவர்களது பாராளுமன்றக் குழுவினூடாக சாதித்துக் கொண்டிருந்தனர்.

காமில் பாஷாவின் மந்திரி சபை ஏற்படுத்தப்பட்டு ஆறு மாதகாலம் சென்ற வேளையில் காமில் பாஷாவின் திறமை, உறுதிப்பாட்டினால் அவரது செல்வாக்கு அதிகரித்தும் பலம் பெற்றும் செல்வதையும், துருக்கியரல்லாத ஏனையவர்களின் நெருக்கம் இவருடன் அதிகரித்து செல்வதையும் அவதானித்த கூட்டமைப்பினர் காமில் பாஷாவை அப்புறப்படுத்த முயற்சித்தனர். விளைவாக நடுநிலையாளர்களும் இணைந்து காமில் பாஷாவின் மந்திரி சபைக்கு ஆதரவாக செயற்பட்டனர். அத்துடன் சமயவாதிகளும் முஹம்மதியக் கூட்டமைப்பு எனும் பெயரின் கீழ் இவர்களுடன் இணைந்து கொண்டனர். இதனால் கூட்டமைப்பினருக் கெதிராய்ப் பலமான தாக்குதல்கள் பரவலாக நடாத்தப்பட்டன. இந்நிலையில் கூட்டமைப்பினர் தமக்கெதிரானவர்கள் எனக் கருதப்பட்ட சில பத்திரிகையாளர்களைப் படுகொலை செய்தமை அதனை மேலும் தீவிரப்படுத்துவதாய் அமைந்து விட்டது. இதனால் தலைநகருள் இவ்களுக்கெதிராய் 1909ல் பெரும் புரட்சி தோன்றி பெரும் எண்ணிக்கை யானோர் கொல்லப்பட்டனர். ஆயினும் இழப்புக்களின் பின்னரும் கூட்டமைப்பினர் மீண்டும் ஒன்றிணைந்து ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்களது ஆட்சிக்காலமாகிய 1908 முதல் 1918 வரையிலான காலப்பகுதியில் மூன்று ஸுல்தான்கள் நாமநிர்வாகிகளாகக் காணப்பட்டனர்.

கூட்டமைப்பினரின் ஆட்சிக் காலத்தில் அவர்களது நடவடிக்கைகள் பின்வரும் பின்னணி களைக் கொண்டதாக காணப்பட்டது.

## ஏதேச்சாதிகாரம்:

நாட்டின் நிர்வாக விடயங்களில் பூரண செல்வாக்குச் செலுத்தும் மூன்று பிரபலங்கள் கூட்டமைப்பிற் காணப்பட்டனர்: தல்அத் பாஷா, அன்வர் பாஷா, ஜமால் பாஷா ஆகியோரே அம்மூவராகும். அவர்களது கூட்டமைப்பின் சுலோகங்களாக ‘‘சுதந்திரம், நீதி, சகோதரத்துவம்’’ ஆகியன முன்வைக்கப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டன. ஆயினும் அவர்கள் இவ்வாசகங்ளினூடாக மக்களை ஏமாற்றினரே தவிர அதன் உண்மை அர்த்தங்கள் அமுல் செய்யப்படவில்லை. மாறாக இம் மூன்று ஆலோகங்களையும் திரைகளாகப் பயன்படுத்தி பின்னால் இம்மூன்றையும் முற்றாக அழித்தொழித்தனர். எவரது ஆலோசனையோ அல்லது பங்கேற்பையோ முழுமையாகப் புறக்கணித்த அவர்கள் எதேச்சாதிகார அல்லது சர்வாதிகாரப் போக்கினையே கடைபிடித்தனர். அத்துடன் அவர்களது நடவடிக்கைகளை எதிர்த்தோர் முரண்பட்டவர்கள் அனைவரையும் அரசியற் படுகொலை செய்தனர். அவர்களுடன் முரண்பட்ட பத்திரிகைகளைத் தடை செய்ததுடன் மக்களது ஆணைக்குச் சற்றும் மதிப்பளிக்காது இராணுவ பலத்துடன் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வெற்றிகளைத் தட்டிப் பறித்தனர்.

‘‘சுதந்திரக் கூட்டுக் கட்சி’’ தோற்றம் பெற்று ஐக்கிய கூட்டமைப்பினருக்கெதிரான அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து ஒரேயொரு ஆசனத்தால் வெற்றியும் பெற்றனர். இதனால் நிலைமை தமக்கெதிராய் மோசமடைவதைக் கண்டுகொண்ட கூட்டமைப்பினர் யாப்பின் 35ம் ஷரத்தில் ஸுல்தானுக்கு மறுக்கப்பட்டிருந்த பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை மக்களவையிடமிருந்து பிடுங்கி மீண்டும் ஸுல்தானுக்குக் கொடுத்தனர். இதனூடாக தமக்கெதிரான பாராளுமன்றத்தை கலைத்துவிட திட்டம் தீட்டினர்.

இவை பற்றிக் குறிப்பிடும் அக்கால நடுநிலையாளர்களான ஜெனரல் ஜவாத் ரிப்அத் உதுல்கான், முஸ்தபா தூரான் போன்றவர்கள் மிகச் சுருக்கமாகவும் கருத்துச் செறிவுடனும் அன்றைய சூழ்நிலையை விபரிக்கின்றனர். ஜெனரல் உதுல்கான் தனது குறிப்பில் ‘‘ஸுல்தான் அப்துல் ஹமீதை பதவியிறக்கிய கூட்டமைப்பினர் நாட்டில் மிக மோசமான கொடுங்கோல் ஆட்சியை மேற்கொண்டனர். ஸுல்தானது ஆட்சிக் காலமாகிய 33 வருடங்களிலும் அறவே இல்லாமலிருந்த

கொடுங்கோன்மை இவர்களது காலத்தில் உச்சத்தை எட்டியது. பல தேசாபிமானிகள் தமது இறுதி மூச்சுக்களை தூக்கு மேடையிலேயே சுவாசித்தனர்'' எனக் கூறுகின்றனர்.

முஸ்தபா தூரான் குறிப்பிடுகையில்: கூட்டமைப்பினரின் சுதந்திரப் பிரகடனம் என்ன வென்பதை மக்கள் மிக விரைவில் உணர்ந்து கொண்டனர். அதாவது சோதனைகளும் வேதனைகளுமே அவர்களுக்குக் காத்திருந்தன. மக்கள் நாய்கள் போன்று தூக்குக் கயிற்றிற் தொங்க விடப்பட்டனர். நாட்டுக்குத் தொண்டு செய்த பல வீரர்களின் நெஞ்சுகள் ஈட்டியால் குத்தப்பட்டன. உண்மையான விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த வீரர்களைக் கொண்ட அம்மண், இரத்தத் தொட்டிகளாகவும், கூட்டுக் கொலைக்களங்களாகவும் மாறின. இவையனைத்தும் கூட்டமைப்பினரின் விடுதலை, சுதந்திரம் வழங்கப்பட்ட காலப்பகுதியிலாகும் எனக் குறிப்பிடுகின்றார்.

## துருக்கிய தேசியவாத[தூராணிய]த்திற்கான அழைப்பு

துவக்க காலத்தில் கூட்டமைபினரின் மூன்று தலைவர்களதும் சிந்தனைப் போக்குகள் மூன்று வேறுபட்ட கோணங்களிற் காணப்பட்டன. தல்அத் பாஷாவின் சிந்தனை உஸ்மானியப் பின்னணியை நோக்கியிருந்தது. அன்வர் பாஷா இஸ்லாமியத்தை நோக்கியதாகக் காணப்பட்டது. மூன்றாவது நபர் ஜமால் பாஷாவின் இலக்கு துருக்கிய தேசியவாதத்தை முன்னோக்கிக் காணப்பட்டது. இறுதியில் மூன்றாவது சிந்தனையே வலுப்பெற்றது.

இச்சிந்தனையை வியாபகம் செய்வதில் ழியா∴ கூக் அல்ப், யூஸுப் ஆக் ஷுறா, அஆ ஓஅலீ அஹ்மத், ஜலால் நூரி, ஹம்துல்லாஹ் ஸுப்ஹீ, தேசியவாதக் கவிஞர் முஹம்மத் அமீன் போன்றோர் முன்னின்றுழைத்தனர்.

துருக்கியத் தேசியவாதிகளின் சிந்தனையில் துருக்கிய இனம் உலகின் மிகப் பழமை வாய்ந்ததும், பரந்து விரிந்ததும், உயர்ந்த அந்தஸ்தும், நெடுங்கால நாகரிகமும் கொண்ட சமூகமெனவும் கருதியதோடு அவர்களும், மங்கோலியர்களும் அடிப்படையில் ஒரே இனம் எனவே இவர்களனைவரும் ஒன்றாகவே கணிக்கப்பட வேண்டுமென்ற சிந்தனையையே "தூறானிய்யா" என்னும் கோசத்தில் உள்ளடக்கினர்.

அத்துடன் மட்டுமல்லாது ஸைபீயா, ரஷ்ய துருக்கிஸ்தான், சீன துருக்கிஸ்தான், பாரசீகம் கௌகாஸ், அனடோலியா, றேமல் மற்றும் சீன மங்கோலியர், ஆஸ்திரிலிய மங்கோலியர், பின்லாந்தியர் அனைவரும் தங்களது ‘‘ஜாமிஆ தூறானியா’’ எனும் குடையின் கீழ் வருவர் என்பதுடன் அவர்கள் முதலில் துருக்கியர் என்ற அடையாளமும், அதன் பின்னரே முஸ்லிம்கள் என்ற அடையாளமும் எனப் பிரச்சாரம்

இச்சிந்தனையை வலுப்படுத்த கூட்டமைப்பினர் மிகக் கடுமையாக உழைத்தனர். அதற்காக இயக்கங்களும், கழகங்களும் நிறுவப்பட்டன. பத்திரிகை, சஞ்சிகைகள் போன்றன அச்சிட்டு வெளியிடப்பட்டன. பாடல்கள் இயற்றப்பட்டதோடு பரந்தளவிலான பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்பட்டன.

‘‘ழியா கூக் அல்ப்’’ என்பவர் ‘‘ஸெலனீக்’’ பிராந்தியத்தில் (யெனீ லிஸான்) புதிய பாஷை மற்றும் (யெனீ ஹயாத்) புதிய வாழ்க்கை என இரு இயக்கங்களையும், (கன்ஜ் கலம்லர்) இளம் பேனாகக்கள் (யெனீ பல்ஸபா) புதிய தத்துவம் எனும் இரு வாராந்த சஞ்சிகைகளையும் நிறுவினார். இதே போல் ரஷ்யாவிலிருந்து இஸ்தான்பூலுக்குப் புலம் பெயர்ந்திருந்த ரஷ்ய துருக்கியரும் புதிய தத்துவம் எனும் அதே பெயரில் இயக்கங்கள் நிறுவி இச்சிந்தனை வளர்ச்சிக்கு பாடுபட்டுழைத்தனர் இதனால் இவ்விரு சக்திகளும் ஒரே சிந்தனையில் சங்கமித்து ஒருங்கே பயணித்தனர்.

‘‘தூறான்’’ எனும் வாசகம் மிகவும் போற்றப்படுவதும், மதிக்கப்படுவதுமான வாசகமாக அவர்கள் மத்தியில் எதிரொலித்தது. துருக்கிய தேசாதிவாதத்தின் அதியுயர் பெறுமானம் கொண்டதாக இதனைக் கருதியதுடன் துருக்கியரின் தாயகம் துருக்கியோ அல்லது துருக்கிஸ்தானோ அல்ல, மாறாக என்றென்றும் நிலைத்திருக்கும் தூறானிய பெரும் தேசமே என ழியா கூக் அல்ப் அறைகூவல் விடுக்கின்றார்.

மேலும் யூத பின்னணி கொண்ட ‘‘காலிதா’’ என்னும் இலக்கிய ஆர்வலரான பெண்மணி தனது பிரபலமான ஓர் இலக்கிய நுலுக்கு தூறான் எனும் பெயர் சூட்டி வெளியிட்டார். பிற்காலத்தில் முஸ்தபா கமாலின் ஆட்சியில் கல்வியமைச்சராக நியமனம் பெற்ற இப்பெண் தூறானியத்திற்காக தீவிர பிரச்சாரம் மேற்கொண்டது மட்டுமல்லாது

ஹிஜாபை தூர வீசிவிட்டு பெண்களுக்கு சுதந்திரம் வழங்கவேண்டுமெனவும் கோஷமெழுப்பினார்.

இவை தவிர தனீன் எனும் பத்திரிகையில் தூறானியக் குறிப்புக்கள் எனும் பெயரில் ஓர் இலக்கியப் பக்கத்தினை ஒதுக்கி தொடராக தூறானிய சிந்தனைகளைப் பிரசுரித்து வந்தனர். மேலும், ழியா கூக் அல்ப் தனது பிரபலமான கவிதைகளில் தூறானியம் எனும் கருப்பொருளை மிக அளவு கடந்து வர்ணித்து வந்துள்ளதோடு நான், நீ, அவன் என்ற வாசகங்கள் துருக்கியர் மத்தியில் இல்லாதொழிந்து அனைவரும் தூறானியன் எனும் வழக்கு நடைமுறைக்கு வரவேண்டும் எனவும் பாடினார்

இத்தகைய தேசியவாதத்தில் எல்லை கடந்த பெருந்தொகையினர் நாங்கள் துருக்கியர் எங்கள் க.்.பா தூறான் எனுமளவு மதி மயங்கியிருந்ததுடன் மங்கோலியர்களின் ஸ்தாபகத் தலைவனான ஜன்கீஸ் கானின்* புகழ் பாடியதோடு அவனால் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகள் பெறப்பட்ட வெற்றிகளாற் பெருமிதமடைந்தனர்.

அதுமட்டுமல்லாது ஜிங்கீஸின் புகழ்பாடி கவிதைகள் பாடல்களையும் இயற்றினர். மேலும் துருக்கிய மொழியில் காணப்படும் அறபு, பாரஸீக சொற்கள் அனைத்தையும் அகற்றி கைவிடப்பட்ட பழமையான துருக்கிய சொற்களை அவற்றிற்குப் பதிலாக மாற்றீடு செய்யுமாறு அறைகூவல் விடுத்தனர்.

## மையப்படுத்தப்பட்ட நிர்வாகம்

ஐக்கியக் கூட்டமைப்பினர் ஒற்றையாட்சி என்ற பெயரில் உஸ்மானிய பேரரசுடன் இணைந்திருந்த பிரந்தியங்கள் அனைத்தையும் துருக்கியக் கோட்பாடு நடைமுறைகளுடன் ஒன்றரக் கலந்து முழுமையாக சங்கமிக்க வேண்டும், அதேபோல் ஒரே நடைமுறையையே அனைவரும் பின்பற்ற வேண்டுமென்பதிலும் மிகக் கடுமையாக போக்கினைக் கடைப் பிடித்ததுடன் உடன்படாதவர்களுக்கெதிராய் அடக்குமுறையைக் கையாண்டனர். அத்துடன் துருக்கியரல்லாதோருக்கு ஆட்சியில் இடமளிக்க மறுத்ததுடன் அனைத்துத் துறைகளையும் துருக்கிய மயப்படுத்தினர்.

இதனால் எதிர்மறை விளைவுகளே ஏற்பட்டன. அதனை முஸ்லிம்களதும், இஸ்லாத்தினதும் பொது எதிரிகள் பயன்படுத்திக்

கொண்டனர். குறிப்பாக அரேபியருடனான அவர்களது போக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. துருக்கியர் தமது பத்திரிகை, பிரச்சார மேடைகளை அரேபியருக்கு ஏசவும், ஏளனம் செய்யவும் பயன்படுத்தினர். யூத பின்னணி கொண்ட “ஜாவித் பெக்” எனும் துருக்கிய மந்திரியொருவர்* அரேபியரைக் கறுப்பினத்தோர் என ஏளனமாக பேசியதுடன் அரேபியரை அடக்கியொடுக்கல், பிரித்தாழுதல், ஓதுக்குப் புறங்களுக்குத் துரத்தியடித்தல் போன்ற நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப் பட்டமையால் அவர்களிடமிருந்து மிகக் கடுமையான எதிர்ப்புக்கள் தோன்ற ஆரம்பித்தன.

அதன் பின்னணியிலேயே அறபுத் தேசியவாதம் உயிர்ப்பிக்கப்பட்டது. இந்நிலையினைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதில் கிறிஸ்தவ மேற்கும், அறேபியக் கிறிஸ்தவர்களும் உற்சாகத்துடன் உழைத்தனர்.

அதேபோல் கூட்டமைப்பினரை எதிர்த்துப் பல இயக்கங்கள் தோற்றம் பெற்றன. அவை தமது உரிமைகளை வேண்டி நின்றதுடன் துருக்கியருக்குச் சமமாக தமக்கும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். ஆட்சியதிகாரத்தில் துருக்கியர் மட்டும் ஏகபோகம் கொண்டாடு வதைத் தவிர்த்து பன்முகப்படுத்தப்பட வேண்டும். அதில் தமக்குரிய சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் எனக் குரலெழுப்பினர். அவர்களை சில இயக்கங்கள் மிகத் தீவிரமாக இயக்கியதோடு அறபுக்கள் துருக்கியரிடமிருந்து முழுமையாகப் பிரிந்து விட வேண்டும் எனும் நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டன. இதன் தொடர்ச்சியே முதலாம் உலகப் போரில் அறபுக்களில் பெரும் தொகையினர் நேச நாடுகளுடன் இணைந்து உஸ்மானியருக்கெதிராய்ப் போரிடத் தூண்டியது என்றால் அது மிகையல்ல.

அவற்றுக்குதாரணமாக: துருக்கிய அறேபிய சகோதரத்துவ இயக்கம் 1908, கஹ்தானிய இயக்கம் 1909, இலக்கிய மன்றம் 1909, அறபியர் ஒன்றியம் 1910, இளம் அறேபியர் 1911, ஏகாதிபத்தியத்துக்கெதிரான உஸ்மானிய கட்சி 1912 போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## கூட்டமைப்பினரும் இஸ்லாமும்

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் இவர்கள் முழுமையான விரோதத்துடனேயே செயற் பட்டனர். இஸ்லாமிய இயக்கம் எனும் சிந்தனையை எதிர்த்ததுடன் முஸ்லிம்களின் ஒற்றுமையை சிதறடிக்கும் மாஸோனிய சிந்தனைகளையே அமுல் செய்வதில் கரிசனை காட்டினர். அவர்களது அதிகாரங்கள் அனைத்தையும் நேர்வழிக்கெதிராகவே பயன் படுத்தினர். அவற்றிற்கு உதாரணமாக முதலாம் உலக மகா யுத்த காலத்தில் ஷரீஆ நீதி மன்றங்களின் தலைமையை மார்க்க அறிஞர்களிடமிருந்து பிடுங்கி நீதியமைச்சின் கீழ்க கொண்டு வந்து இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியதுடன் அவற்றை ஏளனமும் செய்து வந்தனர்.

மேலும் புதிய சமூகம் என்றொரு கோட்பாட்டினை அறிமுகம் செய்து தொழுகை, நோன்பு, ஹஜ் தேவையில்லை என்னும் பிரச்சாரத்தினை முன்னெடுத்தனர். இஸ்லாமிய அறிஞர்களை அடக்கியொடுக்கி அவர்களை சிறையில டைத்தனர். இவை தவிர தலைப்பாகை அணியும் முஸ்லிம்களை அவர்கள் நேரடியாகத் தாக்கியது மட்டுமல்லாது அவர்களுக்கெதிரான மக்கள் எழுச்சி அனைத்திலும் மார்க்க அறிஞர்கள் மாணவர்களைத் தேடித் தேடிக் கைது செய்ததுடன் இவர்களனைவரும் தலைப்பாகைக் கூட்டம் என நாமமும் சூட்டினர்.

இவர்களது காலப்பிரிவில் பெண்கள் ஆபாசமாகத் திரிவதை உற்சாகப்படுத்தியதோடு ஹிஜாபைக் கழற்றுமாறு பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. அவற்றை நயவஞ்சக யூதர்களே மேற்கொண்டனர். அதற்குப் பக்கபலமாக அன்று அவர்களால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு அரசு செயற்பட்டுக் கொண்டிருந்தது.

ஹிஜாப் இஸ்லாமிய உடையல்ல. அது உரோமர்களிடமிருந்து முஸ்லிம்களால் பிரதி பண்ணப்பட்ட ஒன்று. பிற்போக்கானது, எவ்வித பயனுமற்றது என்றெல்லாம் அவர்களது பத்திரிகைகள், ஏனைய ஊடகங்கள் அனைத்தும் பிரச்சாரம் மேற்கொண்டதுடன் ஆண்களும் பெண்களும் இரண்டறக் கலக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி அதிற் பங்கேற்க இளம் ஆண், பெண்களை உற்சாகமூட்டினர். மேலும் இஸ்லாம் ஒரு பிற்போக்குவாத சிந்தனை காலத்திற்கும், நவீன மாற்றங்களுக்கும் இசைவற்றது என வர்ணித்தனர்.

## கூட்டமைப்பு ஆட்சியில் நாடு எதிர்கொண்ட இழப்புக்கள்

இவர்களது ஆட்சிக் காலத்தில் நாட்டுக்குப் பல சோதனைகளும், இழப்புக்களும் ஏற்பட்ட வண்ணமிருந்தன. 1911ல் இத்தாலி – திரிப்போலிக்கிடையிலான யுத்தம் நடைபெற்றது, 1912ல் பால்கன் நாடுகள் உஸ்மானிய சாம்ராஜ்யத்திற்கெதிரான யுத்தத்தில் குதித்தன. அடுத்து, 1914ல் அரசின் முதுகெலும்பை உடைத்து நொறுக்கிவிட்ட முதலாம் உலகப் போர் துவங்கப்பட்டது, இதில் அனாவசியமாக ஸுல்தான் முஹம்மத் றஷாத் மற்றும் மார்க்கப் பெரியார்களது எதிர்ப்புக்களையும் புறக்கணித்து ஜேர்மன், ஆஸ்திரியா தலைமையிலான அச்சு நாடுகளின் அணியில் போரிற் குதித்தனர் பொறுப்பற்ற கூட்டமைப்பினர். இறுதியில் அச்சு நாடுகள் படுதோல்வியடைந்தமையால் துருக்கி நேச நாடுகளால் துவம்சம் செய்யப்பட்டு ஐரோப்பாவின் நோயாளியாக மாற்றம் பெற்றது*.

கூட்டமைப்பினர் ஸுல்தான் அப்துல் ஹமீதின் காலத்தில் காணப்பட்ட பேரரசின் நீண்ட நிலப்பரப்புக்களிற் பெரும்பாலானவற்றைப் பறிகொடுத்து விட்டனர். ஸுல்தானின் காலத்தில் லிபியா தொடக்கம் யெமன் ஹிஜாஸ் வரையும், இறாக்கிலிருந்து பொஸ்னியா வரையுமான நீண்ட நிலப்பரப்புக்களுடன் பல எண்ணிக்கையிலான தீவுகளும் பேரரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன. ஆயினும் முதலாம் உலகப் போர் முடிவடைந்த போது ஐரோப்பாவில் அரசுக்கிருந்த அனைத்து மாநிலங்களையும் இழக்க நேரிட்டது. இதன் நிமிர்த்தம் பல்கேரியா தனி நாடாகப் பிரிந்து சென்றது. குரோசியாவும், பொஸ்னியாவும் ஆஸ்திரியாவினால் ஆக்கிரமிக்கப்பட்டன. கிரேக்கம் “க்ரீத்” ஐக் கைப்பற்றியது. இத்தாலி லிபியாவையும் மத்திய தரைக்கடலிற் காணப்பட்ட பல தீவுகளையும் ஆக்கிரமித்துக் கொண்டது*.

அச்சு நாடுகளான ஜேர்மனி, ஆஸ்திரியாவுடன் இணைந்து முதலாம் உலக மகா யுத்தத்தில் ஈடுபட்டுப் படுதோல்வியடைந்த துருக்கி பாரியளவில் உயிர், உடமைகளை இழந்தது. அதுமட்டுமல்லாது நாட்டின் தலைநகர், பாராளுமன்றம் என கேந்திர முக்கிய ஸ்தலங்கள் கூட நேச நாடுகளின் கரங்களில் வீழ்ச்சி கண்டன.

மேலும் கிரேக்கம் நாட்டின் மேற்குப் பகுதியைக் கைப்பற்றியதுடன் அறபுத் தேசம் துருக்கியர் ஆதிக்கத்திலிருந்து முழுமையாக விடுபட்டதுடன் சிறு சிறு நாடுகளாகப் பிரிந்து நேச நாடுகளின் கட்டுப்பாட்டின் கீழ் அகப்பட்டிருந்தன.

1908 முதல் 1918 வரையான கூட்டமைப்பினர் ஆட்சி நாட்டின் வரலாற்றிற் பெரும் திருப்பு முனையாகக் காணப்பட்டதுடன் அடுத்து வந்த குடியரசுக் காலத்தில் நடந்தேறிய பல்வேறு அபாயங்களின் துவக்கமாகவும் காணப்பட்டது.

**பிற்குறிப்பு :**

* முஸ்லிம்கள் வரலாற்றில் தாத்தாரியர் படையெடுப்பு என பிரபலம் வாய்ந்த நிகழ்வும் அதனால் பல இலட்சம் போத்களின் உயிர்கள் கூட்டாகவும் தனியாகவும் ஈவிரக்கமின்றி பறிக்கப்பட்டும் வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிலையங்கள் குடியிருப்புக்கள் என அனைத்தும் இடித்துத் தரைமட்டமாக்கி துவம்சம் செய்ததுடன் அப்பாஸிய கிலாபத்தை அழித்தொழித்த அரக்கர்களின் தலைவனே இவன் என்பது கவனிக்கத் தக்கதாகும்,

* யுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் ஸுல்தான் அப்துல் ஹமீதின் காலத்தில் உருவாக்கப்பட்ட இஸ்லாமிய உலகின் ஒருங்கமைப்பைப் பயன்படுத்திக் கொள்வதற்காக “அல் ஜாமிஆ அல் இஸ்லாமியா” எனும் சுலோகத்தை மையப்படுத்திப் போரிற் கலந்து கொள்ளுமாறு அனைத்து முஸ்லிம்களுக்கும் அழைப்பு விடுத்தார்கள். அதற்காக, “இப்போர் முஸ்லிம்களை அடிமைத் தழையிலிருந்து விடுவிக்கவும் இஸ்லாமியப் புனிதத் தலங்களைப் பாதுகாக்கவும் மேற்கொள்ளப்படும் புனிதப்போர். எனவே இதிற் பங்கேற்பது அனைத்து முஸ்லிம்களதும் கடமை” எனக் குறிப்பிட்டு பிரபல மார்க்க அறிஞர்களிடமிருந்து பலவந்தமாக பத்வாக்களைப் பெற்றுக் கொண்டு அதனைப் பரப்புவதற்காக பல குழுக்களை அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பியதுடன் பிரசுரங்களையும் விநியோகித்தனர். யுத்தத்தின் ஆரம்ப கட்டங்களில் அச்சு நாடுகளின் வெற்றி புலப்பட்ட போது உடனடியாக அவர்களது “தூறானியா” என்ற அடிப்படை வாதத்திற்குப் புரண்டு விட்டனர்.

* லிபிய ஆக்கிரமிப்புக்கு கூட்டமைப்பு நிர்வாகத்தில் அதியுயர் பதவி வகித்த “ஷக்கி பாஷா” வின் ஒத்துழைப்பு மிகப்பிரதானமாகக் காணப்பட்டதுடன், மாஸோனிய யூதனாகிய “மத்ர் ஸாலிம்” என்பவனின் முழு முயற்சியும் பங்களிப்புச் செய்தது

## கிலாபத் ஒழிக்கப்பட்டு குடியரசுப் பிரகடனம்

ஹிஜ்ரி 1337/1918ல் ஸுல்தான் முஹம்மத் றஷாதின் மரணத்தின் பின்னர் ஸுல்தான் முஹம்மது வஹீதுத்தீன் கிலாபத் பொறுப்பினை ஏற்றார். அவர் பதவியேற்று சில மாதங்களே செல்வதற்குள் நாடு முழுமையாக மேற்கு நாடுகளால் சூறையாடப்பட்டது. அதாவது முதலாம் உலகப் போரிலிருந்து வெளியேறும் போது தீபகற்பத்தின் வெளியில் இருந்த அனைத்துப் பகுதிகளையும் அரசு இழந்திருந்தது. மீதமிருந்த ஒரேயொரு பகுதியான இஸ்தான்பூல் கூட ஆங்கிலேயக் கடற்படையால் முற்றுகையிடப்பட்டிருந்தது.

இக்காலகட்டத்தில் இஸ்லாமிய உலகுக்கெதிரான மேற்குலகின் அட்டூழியங்களும் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளும் மிகமோசமான கட்டத்தினை எட்டியிருந்தது. இந்நிலை முழு முஸ்லிம்களையும் உளவியல் ரீதியில் பாதித்திருந்தது. இவ்வனைத்து சவால் களுக்கும் மத்தியிலும் ஸுல்தான் வஹீதுத்தீன் முஸ்லிம்களின் கலீபா என்ற வகையில் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டை மீட்க விரும்பினார். அதற்காக முஸ்தபா கமால்* என்பவரின் உதவியைக் கோரியதுடன் அவர் மீது பூரண நம்பிக்கையும் வைத்திருந்தார். அதனால் கிழக்குப் பகுதியில் புரட்சியொன்றை ஏற்படுத்துமாறும் அதனூடாக அரசியல் ஆர்வலர்கள் மேற்கு ஆக்கிரமிப்பாளர்களுடன் பேரம் பேசி முடிந்தவரை அதிகமான பகுதிகளை மீட்டுக் கொள்ளலாம் என எண்ணினார்.

இப்புரட்சியை எதிரிகளின் பார்வையிலிருந்து குறிப்பாக ஆங்கிலேயரின் பார்வைக்குப் புலப்படாதவிதத்தில் மேற்கொள்வதற்காக அனடோலியப் படைப் பிரிவின் பொதுப் பரிசோதகராக முஸ்தபா கமாலை விசேட அதிகாரங்களுடன் நியமித்தார். அத்துடன் 20000 உஸ்மானிய தங்க நணயங்களையும் வழங்கினார்.

ஆயினும், முஸ்தபா கமால் நம்பிக்கைத் துரோகமிழைத்து ஸுல்தானை ஏமாற்றிவிட்டு தனது அபிலாசைகளுக்குச் சாதகமாக அதனைப் பயன்படுத்திக் கொண்டார். ஸுல்தான் முஸ்தபா கமாலை கிழக்கிற்கு அனுப்பியதன் நோக்கத்தைப் புரிந்து கொண்ட நேசநாட்டு

அணியினர் “பரீத் பாஷா”விடம் புகார் செய்தனர். அவ்வாறே அனடோலியா கவர்னர்களும் நிர்வாகிகளும் முஸ்தபாவின் அத்துமீறிய செயல்களையும் அளவுக்கதிகமான அதிகாரங்க ளையும் எதிர்த்து குற்றச்சாட்டுக்களையும் முறையீடுகளையும் தெரிவித்த வண்ணமிருந்தனர். ஆகையால், அமைச்சு அவரைத் திருப்பியழைத்தது ஆயினும் முஸ்தபா அதனைத் தட்டிக் கழித்தார். தொடராகப் பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு, அமைச்சு அவரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பலவாறு முயற்சித்தும் அவர் அவற்றை அசட்டை செய்தவராகவே காணப்பட்டார்.

இறுதியில் நெருக்கடிகள் நிறைந்துவிட்ட போது அமைச்சு அவரை பதவி நீக்கியது. இந்நிலையிலும், படிவத்தில் கையொப்பமிட ஸுல்தான் மறுத்துவிட்டார். ஏனெனில் அவர் தொடர்ந்தும் அவன் மீது நம்பிக்கை வைத்திருந்தார். ஆனால் தொடராக மேற்கொள்ளப் பட்டுவரும் இரு தரப்பினரதும் நடவடிக்கைகளால் நிர்ப்பந்தமாக ஸுல்தான் பதவி விலக்கும் உத்தரவுப்பத்திரத்தில் கையெழுத்திட்டார். அதற்கும் கட்டுப்பட மறுத்த முஸ்தபா கமால் தனக்கு ஆதரவாக படையினரையும் பொதுமக்களையும் சேர்த்துக் கொண்டார். இவற்றினடியே தோன்றிய மக்கள் எழுச்சி மிக வேகமாக காட்டுத்தீ போல் அனடோலியா பிராந்தியம் முழுவதும் பரவலாயிற்று. அத்துடன் 1919 ஜூலை 23ல் நடைபெற்ற (أرضـــروم) என்ற மாநாட்டுக்கு முஸ்தபா கமால் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 1919 செப்டம்பர் 04 இல் நடைபெற்ற “ஸீவாஸ்” எனும் மாநாட்டுக்கும் முஸ்தபாவே தலைவராகத் தெரியப்பட்டார். இவ்விரண்டிலும் அவர் தன்னை ஸுல்தானின் விசுவாசி போன்றே காட்டிக் கொண்டார். ஆயினும் ஸுல்தானுக்கெதிராக நேசநாடுகளால் மேற் கொள்ளப்பட்ட சூட்சிகளும், சதிநடவடிக்கைகளும் நின்றபாடில்லை. முஸ்தபா கமாலின் வெள்ளியே பிரகாசிக்க வேண்டுமென்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அத்துடன் அவரை ஒரு விடுதலை வீரராக மக்கள் முன் காட்சிப்படுத்தவும் பாடுபட்டனர்.

ஈற்றில் அதுவே நடந்தேறியது. விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியதோடு பொதுமக்களின் உணர்வுகளைத் தூண்டும் வகையில் வீர முழக்கங்களை முழங்கி மக்களைத் தம்பக்கம் இணைத்துக் கொண்டார். இதன் கவர்ச்சியால் துருக்கிக்கு வெளியிலிருந்தும் முஸ்தபாவுக்கு ஆதரவு கிட்டியது.

அடுத்தடுத்து பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பல தேசிய மாநாடுகளும் நடாத்தப்பட்டதிலிருந்து ஆக்கிரமிப்புப் படைக்கெதிராய் வரையறுத்தளவிலான போராட்டங்களும், கிரேக்கர்களுக்கெதிரான போர் என, ஆக்கிரம்மிப்பாளர்களை எதிர்கொள் வதற்காக எல்லாப் பகுதிகளிலும் எதிர்ப்பியக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதன் தொடரில் 1920.04.23 இல் மாபெரும் தேசியப்பேரவையொன்று உருவாக்கப் பெற்று அதன் தலைவராக முஸ்தபா கமால் தெரிவுசெய்யப்பட்டதோடு, அதன் தலைமையில் அங்கராவில் ஓர் அரசாங்கம் நிறுவப்பட்டு, இஸ்மத் ஐனூனு என்பவர் 1921 இல் லண்டன் மாநாட்டிற்குத் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டார். பின்னர் 1922ல் ரஷ்யாவுடன் (காரிஸ்) உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. மேலும் கிரேக்கர்களுக்கெதிராய் பெரும் தாக்குதலொன்றை மேற் கொண்டு அவர்களை சின்னாபின்னமாக்கி அஸ்மீரிலிருந்து துரத்தியடித்தனர். இதனால், மக்களமைப்புக்களெல்லாம் இவரைச் சூழ ஒன்று திரண்டதுடன் ஸுபிகளின் கலைகளும் அவற்றின் பின்னணியில் இயங்கிய ஆயுதக் குழுக்களும் இந்த விடுதலை வீரரைப் புடை சூழ்ந்தனர்.

இவற்றின் பின்னர் 1922 டிசெம்பரில் ஜனநாயக மக்கள் கட்சி துவக்கப்பட்டது. அதன் அடிப்படைகள் அல்லது சுலோகங்களாக பின்வரும் ஆறு அம்சங்கள் காணப்பட்டன. அவையாவன: ஜனநாயகம், தேசீயம், மக்களாண்மை, அரச மயமாக்கல், மதச்சார்பின்மை, புரட்சி என்பனவாகும்.

இவ்வாறு முஸ்தபா கமால் பலம் பெற்றார். இவற்றின் பின்னணியில் ஸுல்தான் முஹம்மத் வஹீதுத்தீனை அசட்டை செய்தனர். அவரைப் பதவியிலிருந்து வெளியேறி நாம நிர்வாகியாக மட்டும் இஸ்தான்பூலில் அமர்ந்து கொள்ளுமாறும் அதிகாரம் அன்கராவிலுள்ள தேசிய சபைக்கு மாற வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். ஆனால் ஸுல்தான் அதனை மறுத்ததுடன் கோரிக்கையை முற்றாக நிராகரித்துவிட்டார். இதன் பின்பு தேசிய சபையின் அங்கீகரத்துடன் முஸ்லிம்களின் கலீபாவாக தன்னைப் பிரகடனம் செய்து ஆட்சிக்கு வந்தார் இரண்டாம் அப்துல் மஜீத் (1889-1944). இவர் கலீபாவாக நியமனம் பெற்ற நான்காம் நாள் “Lozan” மாநாடு கூட்டப்பட்டது. அதில் அங்கரா தூதுக்குழு மாத்திரமே பங்கேற்றது.

இக்குழுவின் தலைவராயிருந்த ஆங்கிலேயரான "Karzon" என்பவர் துருக்கியை தனிநாடாக அங்கீகரிப்பதற்கும், மாநாடு வெற்றிகரமாக முடிவடைவதற்கும் நான்கு நிபந்தனைகளை முன்வைத்தார்.

1. இஸ்லாமிய கிலாபத்தை முற்றாக நீக்குதல்
2. அரசாங்கத்தை முழுமையாக மதச்சார்பற்றதாக மாற்றுவதுடன் இஸ்லாத்துடன் அதற்கு எவ்வித தொடர்பும் இல்லாதொழித்தல்.
3. கலீபாவையும், உஸ்மானிய பரம்பரையினர் அனைவரையும் நாட்டைவிட்டு துரத்துவதுடன் அவர்களது சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்தல்.
4. இஸ்லாமிய ஷரீஆ பின்னணி கொண்ட உஸ்மானிய யாப்பினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக சிவில் யாப்பொன்றினை உருவாக்கல் என்பனவாகும்.

முஸ்தபா கமாலும் அவனது அடிவருடிகளும் இவற்றை முழுமையாக நிறைவேற்றியதுடன் இவற்றிற்குத் துணையாக இன்னும் பல விடயங்களையும் உட்புகுத்தி அதனடிப்படையில் இயங்க வாரம்பித்தனர்.

## குடியரசுப் பிரகடனம்

1923.10.30. மாலை 8.30 க்கு தேசிய சபையின் உயர்மட்டக் குழுவினரால் துருக்கி குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து வாக்கெடுப்பிற் கலந்து கொண்ட சபையின் 158 உறுப்பினர்களால் குடியரசுத் தலைவராக முஸ்தபா கமால் தெரிவு செய்யப்பட்டார். இம்மகிழ்ச்சியைக் கொண்டாடு முகமாக மறுநாள் அங்கரா, இஸ்தான்பூல் ஏனைய நகர்களிலெல்லாம் வான் நோக்கி (101) பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுக் கொண்டாடப்பட்டது.

## இஸ்லாமிய கிலாபத்தை நீக்குதல்

முஸ்தபா கமால் கிலாபத்திற்கெதிரான சிந்தனையைத் தனது உள்ளத்தில் மறைத்தவாறே செயற்பட்டு வந்திருந்தார். நாளடைவில் அனடோலியாவில் அவரது செல்வாக்கு அதிகரித்து பலம் பெற்ற போது கிலாபத்தை ஒழித்து உடனடியாக நிறைவேற்றினால் துருக்கியில் மட்டுமல்லாது முழு இஸ்லாமிய உலகும் தனக்கெதிராய் மாறும்

அபாயத்தை உணர்ந்திருந்த அவர் படிப்படியான முயற்சியில் இறங்கினார். அதாவது கலீபாவிடமிருந்து அதிகாரத்தைப் பிரித்து அன்கராவிலுள்ள மக்களவைக்கு வழங்க வேண்டும். கலீபா மார்க்க அடிப்படையிலான கௌரவ நிர்வாகியாக இருந்தாற் போதுமானது எனும் ஆலோசனையை முன்வைத்தார்.

ஆனால் அவரது ஆதரவாளர்களாக சபையிலிருந்தோரில் 80 பேரைத் தவிர ஏனைய அனைவருமே அதற்கெதிராய் கிளம்பினர். ஆயினும் முஸ்தபா கமால் தளரவில்லை. தனது கொள்கை அடிப்படையில் செயற்பட அனைவரையும் நிர்ப்பந்தித்தான். இறுதியில் மக்களவை இவ்விடயத்தை "திட்டமிடல், ஷரீஆ, நீதி" ஆகிய மூன்று துறை சார்ந்தோரிட மும் பரிசீலனைக்காக அதனை ஒப்படைத்தது. அவற்றுள் ஷரீஆ சபை இதனை முற்றாக நிராகரித்து கிலாபத்தும் அதிகாரமும் ஒன்றிலிருந்து மற்றையது பிரிக்க முடியாதவை எனவே இணைந்தே இருக்க வேண்டுமென அறுதியாய்க் கூறிவிட்டது.

இவ்வனைத்திற்கும் மத்தியிலும் எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் மீது அழுத்தம் பிரயோகித்து அச்சுறுத்தி 1922.11.1ல் முஸ்தபா கமால் தனது திட்டத்தைப் பலவந்தமாக நிறைவேற்றிக் கொண்டான்*. இவ்வாறு அதிகாரமற்ற குற்றுயிரான நிலையில் 1924 வரை கிலாபத் தொடர்ந்தது.

ஈற்றில் 1924.03.03ல் முஸ்தபா கமால் அதனை முழுமையாகக் இல்லதொழித்தான். அந்நிகழ்வை முஸ்தபா கமால் தலைமையிலான தேசிய சபை 429,430,431 ஆகிய இலக்கத் தீர்மானங்களின் படி நிறைவேற்றி முடித்தது.

**அதாவது:**

1. இஸ்லாமிய கிலாபத்தை முற்றாக ஒழிப்பதும் கலீபாவையும் அவரது அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் நாட்டை விட்டும் வெளியேற்றுதல்.
2. ஷரீஆ மற்றும் வக்பு அமைச்சுக்களை ஒழித்தல்.
3. மார்க்க, ஏனைய கல்விசார் நிறுவனங்கள் அனைத்தையும் கல்வியமைச்சுடன் இணைத்தல். அதாவது தனியான சமய பாடசாலைகளை தடை செய்தல்.

மேற்போந்த தீர்மானங்களின் அடிப்படையில் ஸுல்தான் 2ம் அப்துல் ஹமீதின் வீட்டை நள்ளிரவில் வந்தடைந்த காவற்படை வாகனம் அவர் தூங்கிக் கொண்டிருந்த நிலையில் அதே ஆடைகளுடன் அவரைத் தூக்கிச் சென்று வாகனத்திலேற்றி நாட்டின் எல்லைக்கு வெளியில் விட்டுச் சென்றனர். பின்னர் இரண்டு நாட்கள் கழித்து உஸ்மானிய பரம்பரையைச் சேர்ந்த அனைத்து ஆண், பெண்களும் ஒன்றுதிரட்டப்பட்டு நாட்டின் எல்லைக்கு வெளியிற் கொண்டு சென்று விடப்பட்டனர்.

## மதச்சார்பின்மை நடவடிக்கைகளைத் தொடர்தல்

குடியரசுப் பிரகடனம் செய்து, இஸ்லாமிய கிலாபத் ஒழிக்கப்பட்டு உஸ்மானிய பரம்பரையினரும் துரத்தியடிக்கப்பட்ட பின்னர் முஸ்தபா கமால் தான் விரும்பியவாறு செயல்படும் சூல்நிலை காணப்பட்டது. அதன் பின்னரே தனது சர்வாதிகார சிந்தனையை முழுமையாக செயல்படுத்தினான். துருக்கிய சமூகத்தை வேருடன் களைவதற்கும், இஸ்லாத்திற்கும் அவர்களுக்குமிடையிலான தொடர்பினை இல்லாமற் செய்வதற்கும், அதனையடுத்து துருக்கிய முஸ்லிம் சமூகத்தை மேற்கத்திய கலாசாரத்துக்குள் நுழைப்பதும், சமயப் பின்னணிகளிலிருந்து அவர்களை ஒதுக்கி விடுதல் எனும் கொள்கைகளில் வெற்றி பெறவேண்டுமென்பதற்காக அழுத்தங்கள், வன்முறைகளைப் பிரயோகித்தான்.

1924.04.08ல் ஷரீஆ நீதிமன்றங்களை மூடிவிட்டு மேற்கத்தேய சட்டங்களின் அடிப்படையில் இயங்கும் நீதிமன்றங்களை நிறுவும் சட்ட மூலம் பாராளுமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது. இந்நீதிமன்றங்களில் சுவீடனின் சிவில் சட்டமும், இத்தாலியின் குற்றவியல் சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதே ஆண்டில் சுவீடன் சிவில் சட்டங்களை துருக்கிய மொழிக்கு மாற்றவும், அதனை விளக்கவும் குழுக்கள் நியமனம் செய்யப்பட்டன. 1926லிருந்து இச்சட்டங்கள் முழுமையாக அமுலுக்கு வந்ததுடன் தனியார் சட்ட மூலம் உட்பட அனைத்து ஷரீஆ சட்டங்களும் நீக்கப்பட்டன. அவ்வாறே அங்கு காணப்பட்ட அனைத்து சூபி தரீக்காக்களும் தடை செய்யப்பட்டதுடன் துறவிகளின் மடங்களும் மூடப்பட்டன.

முஸ்தபா கமாலின் அடிவருடிகள் முஸ்லிம்களின் ஆடைவிவகாரங்களிற் கூட தலையீடு செய்தனர். இஸ்லாமிய உடை

அணிவதற்கு அவர்களால் வரையறுக்கப்பட்ட ''மதகுருக்கள்'' மட்டும் பள்ளிவாசலினுள் அணிவதற்கு அனுமதிக்கப்பட்டனர். அங்கும் தலைகளில் பிரெஞ்சுத் தொப்பிகளையே அணிய நிர்ப்பந்திக்கப்பட்டனர். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரச தனியார் துறையினர், ஏனையோர் அனைவரும் தனித்துவமான இஸ்லாமிய தொப்பிகளை அணிவதிலிருந்து தடை செய்யும் சட்டம் பிறப்பிகப்பட்டு பிரெஞ்சுத் தொப்பியணியும் கட்டாய சட்டம் அமுல் செய்யப்பட்டது.

முஸ்லிம்களுக்கு விரோதமாக கட்டாயப்படுத்தப்பட்ட இத் தொப்பி விவகாரத்தில் துருக்கியின் பல பாகங்களிலும் இரத்த அறுகள் ஓடின. பல்லாயிரக்கணக்கானோர் தூக்குக் கம்பங்களிற் தொங்கவிடப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். தலைகள் துண்டிக்கப்பட்டன. ஏனெனில் துருக்கிய முஸ்லிம்கள் பிரஞ்சுத் தொப்பியணிவது இறைநிராகரிப்பின் அடையாளம் எனக் கூறி அதனை அணிய மறுத்தனர். ஆயினும் அவர்கள் பலப்பிரயோகத்திற்குட்பட்டதுடன் துருக்கி முழுவதும் நிறுவப்பட்ட விடுதலை நீதி மன்றங்களின் மூலம் அழித்தொழிக்கப்பட்டனர்.

பெண்களைப் பொறுத்த வரையில் ஹிஜாப் தடை செய்யப்பட்டு மேற்கத்திய பாணியில் ஆபாசமாகவும், விரசமாகவும் ஆடை அணியவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அத்துடன் கமாலின் கைக்கூலிகள் குடும்ப விவகாரங்களிற் கூட தலையீடு செய்தனர். விவாக விடுதலை தடைசெய்யப்பட்டதுடன் பலதார மணமும் ஒழிக்கப்பட்டது. வாரிசுரிமையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம பங்கு வழங்கப்பட வேண்டுமெனப் பணித்தனர். இவையனைத்திற்கும் ''சுதந்திரம்'' என நாமங்களும் சூட்டினர். 1928ல் துருக்கியில் அறபு எழுத்துக்கள் தடை செய்யப்பட்டு லத்தீன் (ஆங்கில) எழுத்துக்கள் அறிமுகம் செய்யப்பட்டன. அதனைக் கற்பிக்க நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வயது வேறுபாடு களுக்கேற்ப பாடசாலைகள் நிறுவப்பட்டு கற்பிக்கப்பட்டன. மேலும் கல்லூரிகளின் பாட விதானங்களில் அறபியில் அல்லது பாரசீகத்தில் கற்பித்தல் தடைசெய்யப்பட்டதுடன், துருக்கிய பதிப்புக்களில் அறபு எழுத்துக்களின் பாவனையும் தடைசெய்யப்பட்டது. இதுமட்டுமல்லாது அறபெழுத்தினைப் பயன்படுத்துவோருக்கெதிராய் 3 மாதங்கள் சிறைத் தண்டனையும் 10 பவுண்கள் தண்டப் பணமும் விதித்து துருக்கியில் சட்டமியற்றப்பட்டது.

1928.04.01ல் துருக்கியின் தேசிய மார்க்கம் இஸ்லாம் எனும் பகுதி நீக்கப்பட்டது. அத்துடன் வலக்கரத்தால் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்யும் முறைமை நீக்கப்பட்டு சுல்யூட் முறை அறிமுகம் செய்யப்பட்டது. ஹிஜ்ரி கணிப்புக்கள் நிறுத்த்பட்டு கிறிஸ்தவ கலண்டர் அமுல் செய்யப்பட்டது. அத்துடன் நீண்டகாலம் ஹஜ் தடைசெய்யப்பட்டிருந்தது. இதனால் இரகசிய வழிகளூடாகவே முஸ்லிம்கள் ஹஜ் கடமை நிறைவேற்றச் சென்றனர். சமய கற்கைகள் தடைசெய்யப்பட்டதுடன் மறைக் கல்விக் கல்லூரியும் தடைசெய்யப்பட்டது. அத்துடன் உலமாக்கள், சன்மார்க்கப் போதகர்களை பயிற்றுவித்தும் உருவாக்கியும் வந்த அனைத்துப் பாடசாலைகள், கல்வி நிறுவனங்களும் தடைசெய்யப்பட்டன.

மேலும் கமாலின் அடிவருடிகள் மார்க்கக் கல்வி மக்களைப் பின்னடைவுக்கு இட்டுச் செல்கிறது எனும் சிந்தனையை வளர்ந்து வரும் தலைமுறையினர் சிந்தனையில் ஊட்டியதுடன் அவையனைத்தையும் முடக்கியும் விட்டனர். அதுமட்டுமல்லாது மார்க்க அறிஞர்களுக்கு நெருக்குதல்களை உண்டு பண்ணி அவர்களைத் துரத்திய வண்ண மிருந்ததுடன் கடுமையான அடக்கு முறைகளையும் பிரயோகித்தனர்.

வெள்ளிக்கிழமையாகவிருந்த வார விடுமுறையை மேற்கைப் பின்பற்றி ஞாயிற்றுக் கிழமைக்கு மாற்றியமைத்தனர். 1932ல் பாங்கு துருக்கிய மொழிக்கு மாற்றப்பட்டது. தொழுகை, குர்ஆன் ஓதுதல் என்பனவும் துருக்கிய மொழிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

அரசாங்கம் அதன் நடவடிக்கைகளுக்கெதிரான அனைத்து மார்க்க எதிர்ப்புக்களையும், வன்முறைகளாலும், மிலேச்சச்சத்தனமாகவும் அடக்கியொடுக்கியது. 1931-32களில் மேலும் உச்ச நிலைக்குச் சென்று பள்ளிகளின் எண்ணிக்கையை வரையறுத்ததுடன் 500மீற்றர் சுற்று வட்டத்தினுள் ஒரு பள்ளிக்கு மேல் இருக்கக்கூடாது எனவும் தடைவிதித்தனர். அதேபோல் பிரசாரகர்களும் 300க்கு மேல் இருக்கக் கூடாதென நிபந்தனையிட்டனர். இஸ்தான்பூலிலிருந்த பிரபல பள்ளிவாசல்கள் இரண்டில் தொழுகை தடைசெய்யப்பட்டு ஒன்று ‘‘அயாசோபியா’’ நூதனசாலையாகவும் மற்றையது ‘‘மஸ்ஜிதுல் பாதிஹ்’’ களஞ்சியசாலையாகவும் மாற்றியமைக்கப்பட்டன.

### பிற்குறிப்பு :

* இவர், 1881ல் ஸலானிகில் ஸுபைதா எனும் பெண்ணுக்கு மகனாகப் பிறந்தார். ஆஸ்தானாவில் இராணுவக் கல்லூரியிற் பயின்று றாஇத் தரத்தில் பட்டம் பெற்றார். உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் இராணுவத்திற் பல உயர் பதவிகளை "வதன்" எனும் இரகசிய இயக்கத்தின் தலைவராகவும் காணப்பட்டார். இவரிடம் புரட்சிக்கான முனைப்புக்கள் காணப்பட்டன. 1916ல் பாஷா தரத்திற்கு உயர்வுபெற்ற இவர் படிப்படியாக திட்டமிட்ட சதி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி இஸ்லாமிய கிலாபத்தை நீக்கி குடியரசுப் பிரகடனம் செய்தது மட்டுமல்லாது உஸ்மானியர்களை விரட்டியடித்து விட்டு தானே துருக்கியரின் தந்தை எனப்பெருள்படும் "அதாதூர்க்" எனும் நாமத்தையும் சூட்டிக் கொண்டார். இறுதியில் எல்லையற்ற மதுப்பாவனையால் உடல் உருக்குலைந்து 1938ல் அழிந்தொழிந்தார்.

* இந்நிகழ்வின் போது உரையாற்றிய முஸ்தபா கமால் கடும் தொனியில் பேசியதோடு சபையோரை விழித்து இவ்விடயம் எந்த விதத்திலும் தவிர்க்க முடியாதது. இங்கு மக்களவைக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்பதல்ல. நடக்கப் போவதை சொல்லி வைப்பது மட்டும் தான். அது நடந்தே தீரும். எனவே, சபை உறுப்பினர்கள் உட்பட இங்கிருப்பவர்கள் அனைவரும் இவ்விடயம் இயற்கையானது எனக் கருதி முழுமையாக ஆதரவு வழங்குவதே சிறந்தது. அதேநேரம், இதற்கு மாற்றமான நிலை காணப்படினும் இவ்விடயம் நிறைவேற்றப்படவே செய்யும். அதேநேரம் சில தலைகள் உருட்டப்படுவதும் தவிர்க்க முடியாது போய்விடும். எனப் பேசி முடித்தான்.